## மத்திய மாகாண சபை – 2023 ஆம் ஆண்டு

-------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மத்திய மாகாண சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடனும் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் பொழிப்பறிக்கை 2024 மே 31 ஆந் திகதி வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 31 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும், அறிக்கையின் பிரதி 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையில் முன்வைப்பதற்காக ஆளுனருக்கும் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ளதாக்கப்பட்ட பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மத்திய மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மூலதத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தலைப்பு 580 கைத்தொழில் அமைச்சுக்குரிய நடைமுறை வேலைக் கணக்கில் மீளாய்வாண்டில் ரூபா 28,675,000 வரவு வைக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய ஒதுக்கக் கணக்கில் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல் தொடர்பாக எந்தவொரு பதிவும் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2024 ஆம் ஆண்டு நாட்குறிப்பு மூலம் சரிசெய்யப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மகாண சபையின் 05 நிறுவனங்கள் மிளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட கூட்டு மொத்தமான ரூபா 46,106,500 ஆன 23 வாகனங்களுக்குரிய ஆவணங்கள், கோவைகள், உரித்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அவற்றில் ஆக்கபூர்வமான தன்மையினை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | 23 வாகனங்களின் தறபோதைய நிலைமை தொடர்பான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. | வாகனங்களின் உரிமையை உறுதிப்படுத்துகின்ற பதிவுச் சான்றிதழ் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேணடும். |
| (இ) | மத்திய காகாண சபையில் 05 வாகங்களின் பெறுமதி இருதடவை, 06 நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்களில் ரூபா 57,000,000 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | * 03 வாகனங்கள் ஆயுர் வேத ஆணையாளரின் பேரில் கையளித்து ஆள்வரித் திணைக்களத்தில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.<br><br>* கைத்தொழில் மைச்சுக்குரிய தற்காலிக பிரதம செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்த வாகனங்கள் பிரதம செலயகத்தில் கணக்கீடு செய்யப்ட்டுள்ளமையால் கைத்தொழி அமைச்சின் கணக்குகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளது.<br><br>* ஒரு வாகனம் விவசாய அமைச்சில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | இரட்டைக் கணிப்பீட்டில் இடம்பெற்ற நிறுவனங்கள் தான் கணக்கீடு மற்றும் அகற்றுதல் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஈ) | 2011 முதல் 2015 இற்கிடையிலான காலப்பகுதியில் ரூபா 7,236,595 விலையில் கொள்வனவு செய்யப்பட்ட ஜீப் வண்டி மாகாண சபையின் நிதிக் கூற்றுக்களில் ரூபா 3,400,000 ஆக ரூபா 3,836,595 குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. | பதிலளிக்கப்படவில்லை. | சரியான பெறுமதியை இனயங்கண்டு நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 34 அனுமதிப்பத்திரக் காரர்களிமிருந்து பெறப்பட்ட ரூபா 3,400,000 மீளச் செலுத்தப்படுகின்ற பிணைவைப்புப் பணம், வைப்புக் கணக்கில் நிறுத்தி வைப்பதற்கு பதிலாக வருமானக் கணக்கில் 1003-07-10 – பொருட்கள் அடகுவைப்பவர்களிடமிருந்து அறவிடப்பட்ட கட்டணம் வருமானத் தலைப்பில் செலவு வைக்கப்பட்டமையால் ஆண்டின் வருமானம் ரூபா 3,400,000 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டின் வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டில் பொருட்கள் அடகு வைப்பவர்களிடமிருந்து பிணைவைப்புக் கணக்கில் அகற்றப்பட்ட ரூபா 40,385,000 இற்குரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | வைப்புக்களை மீனச் செலுத்துவதற்காக இறைவரித்திணைக்களத்தில் கோரும் போது பொதுத் திறைசேரிக்கு வழங்கப்பட்டுள்ளது. | உரிய உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (எ) | வலப்பனை பிரதேச செயலகப் பிரிவில் நபரொருவருக்கு வாகைக்கு வழங்கப்பட்டிருந்த காணியில் இருந்து 2010 சனவரி 10 ஆம் திகதி முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கிடைக்க வேண்டிய ரூபா 23,324,800 வாடகைத் தொகை காணித் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ரூபா 1,200,000 தொகை 2024.02.26 ஆம் திகதி அறவிடப்பட்டுள்ளது. | பெறவேண்டிய வருமானம் சரியாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (ஏ) | காணித் திணைக்களம் சமர்ப்பித்த பரீட்சை மீதியில் ஆதனங்கள் பொதிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 15,517,605 ஆக இருந்த போதிலும் நிதி நிலைமை கூற்றில் ரூபா 36,338,826 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக 20,821,221 வேறுபாடு காணப்பட்டது. | பரீட்சை மீதியில் இந்தத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற கணக்கு வைத்தல்கள் மாத்திரமே மேற்கொள்ளப்கின்றது. அதனால் கணக்காய்வு ஐய வினாவில் குறிப்பிடப்பட்ட வேறுபாடுகள் காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | வேறுபாடுகளை இனங்கண்டு தீர்த்து வைத்து கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தில் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் காணி, கட்டடங்கள் மற்றும் வாகனங்களினின் கூட்டுப் பெறுமதி ரூபா 670,664,375 ஆக இருந்த போதிலும் அது சிகாஸ் கணனி நிகழ்சித் திட்டத்தில் ரூபா 637,233,000 ஆக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 33,431,375 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சிகாஸ் மென்பொருளில் உள்ளடக்கப்பட்டுள்ள சொத்துக்கள் கணக்குகளின் மீதிகளை அடிப்படையாகக் கொண்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில் முன்னரைப் பகுதியில் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள் சிகாஸ் முறைமையில் உள்ளடக்க முடியதாதிருந்தமையால் எதிர்காலத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மூலதத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் வடமத்திய மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன.

நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உளள்கக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 1.5.1 தலைப்பு 540 - ஆளுநர் செயலகம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஒக்கோபர் 12 ஆம் திகதி இலக்கம் சீஎஸ்/சீஎஸ்/11-8 என்ற சனாபதிபதி செயலாளரின் அரசாங்க செலவினம் சுற்றறிக்கையின் 4 மற்றும் 7.3 ஆம் பந்தி ஆளுநரால் பயன்படுத்தப்பட்ட இரண்டு உத்தியோகபூர்வ வாகனங்கள் 2020 மே முதல் 2022 ஏப்ரல் வரையான 24 மாத காலப்பகுதிக்காக எரிபொருள் படிக்கு மேலதிகமாக ரூபா 930,020 மேலதிக எரிபொருள் 6720.21 லீற்றருக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சில மாகாண சபைகள் இவ்வாறு மேற்கொண்டமையால் அதன் பிரகாரம் கொடுப்பளவு செய்யப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஆலோசனகளுக்கு இனங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மாகாண நிதி விதி 54.1.2, 54.1.3 மற்றும் 54.1.6 இற்கு இனங்க ஆளுநர் செயலகத்துக்குரிய 06 வாகனங்களுக்கு உரியதாக இடம் பெற்ற ரூபா 889,506 ஆன விபத்துக்கள் தொடர்பாக இழப்பு நட்டங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்வில்லை. | ரூபா 59,175 மாகாணசபை நிதியத்தில் பதிவழிக்கப்பட்டுள்ளதுடன் ரூபா 26,561 சாரதிகளிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் ரூபா 168,031 பெறுமதி இற்கு உரிய வழக்கு நடைபெறுகின்றது. | நட்ட இழப்புகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2022 பெப்ரவரி 25 ஆம் திகதி 01/2020 ஆம் இலக்க அரச நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் ஆளுநர் செயலகத்துக்குரிய 07 வாகனங்கள் அரச இலட்சினை இடல் மற்றும் வாகனங்களில் நிறவனத்தின் பெயரைக் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் அரச இலட்சினை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஆலோசனைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் 30/2016 என்ற அரச நிருவாக சுற்றறிக்கையின் 3.1 பந்தியின் பிரகாரம் ஆளுநர் செயலகத்திற்குரிய 02 வாகனங்கள் தொடர்பாக எரிபொருன் எரிவு பரிசோதனை குறித்துரைத்த காலத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஆலோசனையின் படி எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஆலோசனைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | நட்ட இழப்பு ரூபா 1,458,304 ஆன 09 வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதி விதி 54 இன் பிரகாரம் ஆரம்ப விசாரனைண மற்றும் இறுதி பரிசோதனை அறிக்கை மேற்கொண்டு பொறுப்பவாய்ந்த தரப்பினர் இனங்காணப்பட்டிருக்கவில்லை. அதில் 01 வாகன விபத்தில் ஏற்பட்ட ரூபா 57,081 நட்ட இழப்பு மாகாண சபை நிதியத்தில் இருந்து பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் 05 விபத்துக்களுக்குரிய ஆரம்ப மற்றும் முழுமையான பரிசோதனை மேற்கொண்டு பொறுப்புவாய்ந்த தரப்பினர் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அந்த நட்ட இழபுக்களில் ரூபா 148,215 தொகை பதிவழிக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | நிதி விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நட்ட இழப்புக்கள் அறவிடப்படல் வேண்டும். |

**1.5.2 தலைப்பு 541 - சபைச் செயலகம்.**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைச் செயலகத்தின் பெயரில் பதிவு செய்த மோட்டார் வாகனமொன்று 2018 ஒக்டோபர் 08 ஆம் திகதி முதல் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் விளைவற்று காணப்பட்டது. | இந்த வாகனம் சபை செயலகத்தின் பயன்பாட்டிற்கு தேவையற்றிருந்தமையால் பழுது பாத்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு இன்னுஅமொரு நிறுவனத்திற்கு வழங்குவதற்கு இனக்கப்பாடு தெரிவித்து | சொத்துக்களை தொடர்ச்சியாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பிரதம செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | மாகாண சபை உறுப்பினர்கள் இருவரிடமிருந்து 06 வருடங்கள் முதல் 17 வருடங்கள் வரையிலான காலமாக அறவிடவேண்டிய ரூபா 249,291 கடன் மீதி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தீர்த்துவைக்கப்பட்டிருக்க வில்லை. | கடன் மீதியை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சபைச் செயலகத்திற்குரிய 12 வாகனங்கள் தொடர்பான ஆவனங்கள் நாளதுவரையாக பேணிச்செல்லப்படாதிருந்ததுடன் அந்த வாகனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணகக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிக்கவில்லை. | 12 வாகனங்கள் பிரதம செயலாளருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. | வாகனங்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | நட்ட இழப்பு ரூபா 154,397 ஆன 01 வாகன விபத்துத் தொடர்பாக நிதி விதி 54 இன் பிரகாரம் ஆரம்பமற்றும் இறுதி பரிசோதனைகள் மேற்கொண்டு பொறுப்புவாய்ந்த தரப்பினர் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | நிதி விதியின் பிரகாரம் நட்ட இழப்பு அறவிடப்படல் வேண்டும். |

**1.5.3 தலைப்பு 543 - பிரதம செயலகம் (ஆளணி மற்றும் பயிற்சி)**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய இலக்கம் 30/2016 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் பிரதிப் பிரதம செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) அலுவலகத்திற்குரிய 01 வாகனம் தொடர்பாக எரிபொருள் எரிவு பரிசோதனை குறித்துரைத்த காலலத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு இனங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.4 தலைப்பு 544 - பிரதம செயலகம் (நிருவாகம்)**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஒக்டோபர் 13 ஆம் திகதிய பிரதம செயலகத்தில் 05 வாகனங்கள் பயனற்றுக் காணப்பட்டது. | ஏனைய நிறுவனங்களுக்கு வழங்குவதற்கான இணக்கப்பாடு வெளியிடப்பட்டுள்ளது. | சொத்துக்களை தொடர்ச்சியாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2002 பெப்ரவரி 25 ஆம் திகதிய இலக்கம் 01/2002 என்ற அரச நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் பிரதம செயலகத்திற்குரிய 38 வாகனங்கள் அரசாங்க இலட்சினையிடுதல் மற்றும் வானங்களின் கதவில் நிறுவனத்தின் பெயரை குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் அரசாங்க இலட்சினையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு இனங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பிரதம செயலகத்திற்குரிய 09 வாகனங்கள் தொடர்பான ஆவணங்கள் நாளதுவரையாக பேணிச் செல்லப்படாதிருந்ததுடன் அந்த வானங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | வாகனங்கள் தொடர்பான ஆவணங்கள் நாளதுவரையாக்கி கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண சபை வருமான கணக்கில் 04 விடயங்களுக்குரிய ரூபா 135,833,299 ஆன நிலுவை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. அதில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து அறவிடப்படாத நிலுவை வருமானம் ரூபா 28,513,534 ஆகும். அது மொத்த | ஏற்றுக்கொள்கின்றோம். | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருமானத்தில் 21 சதவீதம் ஆகும். | | |
| (உ) | மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்யும் திணைக்களம் மற்றும் மாகாண போக்குவரத்து திணைக்களத்தின் தரவு முறையிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் பிரதம செயலகத்திற்குரிய 04 வாகனங்கள் தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் அந்த வாகனங்கள் மத்திய மாகாண சபையின் நிறுவனங்களினால் பயன்படுத்தப்பட்டிருந்த மைக்கும் எந்தவித சான்றுகளும் சமர்ப்பிக்கப்படவில்லை. | தகவல்களைக் கண்டறிந்து அறிக்கையிடப்படும். | தகவல்களை வெளிப்படுத்தி பொருத்தமான பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | மாகாண சபைக்குரிய 38 உடைந்த வாகனங்கள் 2017 முதல் மீளாய்வாண்டு வரையான காலத்தில் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த வாகனங்களின் பதிவு உரித்து உரிய தனியார் தரப்பினருக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கவில்லை. | பரீட்சித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பதிவு உரித்தை கையளிப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | நட்ட இழப்பு ரூபா 254,151 ஆன 06 வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதி விதி 54 இன் பிரகாரம் ஆரம்ப மற்றும் இறுதி பரிசோதனைகள் மேற்கொண்டு பொறுப்புவாய்ந்த தரப்பினர் இனங்காணப்பட்டி ருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | நிதி விதியின் பிரகாரம் நட்ட இழப்பை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.5 தலைப்பு 546 - மாகாண இறைவரித் திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மத்திய மாகாணத்தில் ஆதனங்கள் பரிமாற்றலின் போது 2015 சனவரி 01 முதல் 2022 யூலை 10 ஆம் திகதி வரையான காலத்தில் மாகாண இறைவரித் திணைக்களத்தின் மக்கள் வங்கி நடைமுறைக் கணக்கில் செலவுவைக்கப்பட்ட ரூபா 50,613,378 ஆன முத்திரை வரி வருமானத்திற்காக வங்கிக்கு இடுவதற்கு உரிய பற்றுச்சீட்டு சமர்ப்பிக்காமையின் காரணமாக அந்த வருமானங்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. மேலும் உரிய நடைமுறைக் கணக்கில் செலவு வைக்கப்பட்ட ரூபா 1,063,261 வருமானத்தை இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்த மிகுதி பற்றுக்சீட்டுக்கள் போதிய அளவு கணக்காய்வு ஐயவினாக்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. | வங்கியில் இடப்பட்ட வருமானங்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் இனங்காண முடியாத வருமானங்களை தீர்த்துவைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | குறைந்த பெறுமதியுடைய ஆததனங்கள் பரிமாற்றும் போது அல்லது விற்பனை செய்யும் போது மாவட்ட பதிவாளர் அலுவலகத்தால் இனங்கண்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட 280 ஆதனங்களைக் கையளித்தல் தொடர்பாக அந்த ஆதனங்களின் பெறுமதியின் சரியாக மதிப்பீடு செய்து அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய முத்திரை கட்டணத்தை சேகரிப்பதற்கு இறைவரித் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சகல உரித்துறுதிகள் தொடர்பாகவும் விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றது. விசாணைகள் பூர்த்தி செய்ப்பபடாத 05 இற்காக மதிப்பீடு காண்பித்தல் வறியோகிக்கப்பட்டு ரூபா 416,850 தொகை அறவிடப்பட்டுள்ளது. | குறைந்த வருமானத் துடனான ஆதனங்களை பரிமாற்றல் தொடர்பான நடவடிக்கைகள் எடுத்து சரியான முத்திரை வரி வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 1990 இல் 17 ஆம் இலக்க மத்திய மாகாண நிதி விஞ்ஞாபனத்தின் 73(8)ஆம் பிரிவின் கீழ் கொள்ளப்பட்ட ஆதனங்களின் விற்பனை மீண்டும் மதிப்பீடு செய்யும் சம்பவங்கள் 96 இன் தகவல்களைக் கோருதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது 70 சந்தர்ப்பங்களுக்குரிய ஆதன பரிமாற்றங்கள், விற்பனை தொடர்பாக அறவிட வேண்டிய மேலதிக முத்திரை வரி ரூபா 5,936,082 இற்குரிய வாடிக்கையாளர்களிடமிருந்து 10 மாதத்திற்கும் 07 வருடங்களுக்கும் இடையிலான காலத்திலிருந்து சேகரிப்பதற்கு இறைவரித் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மேலதிக கட்டணத்தை தீர்மானித்தல் நீண்ட செயற்பாடாகும். 2023 இன் போது ஆதனங்கள் தடை செய்யும் 109 கட்டளைகள் மற்றும் 23 நீதிமன்ற வழக்குகள் தொடரப்பட்டுள்ளது. | மேலதிக முத்திரை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மாகாண இறைவரித் திணைக்களத்திற்குரிய 01 வாகனம் தொடர்பான ஆவணங்கள் நாளதுவரைவாக பேணிச்செல்லப்படாதிருந்ததுடன் அந்த வாகனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்யப்படும். | சொத்துக்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.5.6 மத்திய மாகாண வலய பொருளாதார அபிவிருத்தி நிறுவனம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | --------------------------------------------- | ------------------------------ | ------------------------------ |
| (அ) | இலங்கை அரச துறையின் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 10 இன் பிரகாரம் ‘‘பெறுமதி மாற்றல் கொடுக்கல் வாங்கல்களில் எழுகின்ற’’ அல்லது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் பிரகாரம் ‘‘பெறுமதி மாற்றல்கள் அல்லாத கொடுக்கல் வாங்கல்களில் எழுகின்ற’’ அல்லது இனங்காண | 2023 இன் இறுதி கணக்குகள் கணக்காய்விற்குரியதாக சுட்டிக்காட்டப் பட்ட பிரகாரம் இலாப நட்டக் கணக்கில் எதிர்வரும் ஆண்டிற்காக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முடியாத வருமானப் பாய்ச்சல்கள் ஆன ரூபா 3,622,114 தொகை “பிற்போட்ட வருமானம் (Differed income)” வருமானமாக 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் இலாபம் அப்பெறுமானத்தால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2023 ஏப்ரல் 10 ஆம் திகதி விடுவிக்கப்பட்ட ரூபா 3,000,000 ஆன நிலையான வைப்புக்கள் 2023 ஏப்ரல் 11 ஆம் திகதி நடைமுறைக் கணக்கில் வங்கிக் கட்டணம் குறைக்கப்பட்டதன் பின்னர் ரூபா 2,999,897 ஆக செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் அது மீளாய்வாண்டின் காசுப் பாய்ச்சல் கூற்றில் காசு உட்பாய்ச்சலாக குறிப்பிடப்பட வேண்டியிருந்த போதிலும் அது காசு வெளிப்பாய்ச்சலைக குறிப்பிடப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு குறிப்பிடப்படுவதாக கணக்காய்விற்கு அறியத்தருகின்றோம். | காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 2,628,231 தொங்கல் கணக்கின் மீதியொன்று காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியிலும் ரூபா 2,628,231 இனால் சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதி நிலைமைக் கூற்றில் தொங்கல் கணக்கின் மீதி தொடர்பாக கண்டறிந்து எதிர்காலத்தில் சரிசெய்வதற்கும், அறிக்கை யிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | தொங்கல் கணக்கின் மீதியை விரைவாக தீர்த்து வைத்தல் வேண்டும். |
| (ஈ) | நிறுவனத்தால் 2022 ஆகஸ்ட் 08 ஆந் திகதி முதல் மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரை காசுப் பெறுவனவுகள் குறிப்பிட்டு காசேடு நாளாதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. கணனி துணையுடன் தயாரிக்கப்பட்ட காசேட்டில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,019,614 செலவு மீதியொன்று காணப்பட்ட போதிலும் அது தொடர்பாக கண்டறிந்து காசேடு சரிசெய்யப்பட்டிருக்க வில்லை. | நிறுவனத்தால் கணனி (Excel) துணையுடன் தயாரிக்கப்பட்ட காசேட்டின் பௌதீக காசேட்டு படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் காசேட்டில் காணப்படுகின்ற ரூபா 3,019,614 செலவு மீதி தொடர்பான அறிக்கை இதுவரையிலும் தற்போது கண்டறியப் படுகின்றது. | காசேட்டில் காணப்படுகின்ற செலவு மீதி தொடர்பாக பரிசோதனைகளை மேற் கொண்டு சரியான மீதியைக் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | நிதி விதி 261.2.2 இன் பிரகாரம் எந்தவொரு பணிகளையும் நிறைவேற்றுவதற்காக வழங்கப்படுகின்ற உப கட்டுநிதி உரிய பணிகள் முடிவடைந்தவுடன் தீர்த்துவைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 15 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 442,600 உப கட்டுநிதி உரிய பணிகள் முடிவடைந்து 30 தினங்களில் இருந்து 08 மாதங்கள் வரையான காலத்துடன் தீர்க்கப்பட்டிருந்தது. | தீர்க்கும் போது காலதாமதம் ஏற்பட்டுள்ளது. | நிதி விதியின் பிரகாரம் தாமதமின்றி கட்டுநிதி தீர்த்துவைக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | 2018 யூலை 18 ஆம் திகதிய இலக்கம் 03/2028 என்ற முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் II ஆம் பந்தி மற்றும் 2019 மார்ச் 09 ஆம் திகதிய இலக்கம் PS/PCMD/SD/01/08 என்ற சனாதிபதி அலுவலக சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத் திறைசேரியினதும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினதும் முன் அங்கீகாரம் மற்றும் தேசிய சம்பளம் மற்றும் ஊழியர் ஆணைக் குழுவின் பரிந்துரையைப் பெற்றுக்கொள்ளாமல் நிறைவேற்று அல்லது நிறைவேற்றுத்தரம் அல்லாத 11 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 110,500 மீளாய்வாண்டின் போது தொலைப் பேசிப்படி செலுத்தப்பட்டிருந்தது. | முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் கீழ் செலுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | பாதுகாப்புச் சேவை மற்றும் சுத்திகரிப்பு சேவைகளை வழங்கி 2019 செப்டெம்பர் முதல் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையான காலத்தில் நூலக சேவை சபையிலிருந்து அறவிட வேண்டிய சேவைக் கட்டணங்களின் கூட்டுமொத்தம் ரூபா 1,841,626 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிதியினை அறவிடுவதற்காக பிரதம அமைச்சு செயலாளருக்கு அறிவிக்கப் பட்டுள்ளது. | நிலுவைக் கட்டட வாடகை விரைவாக அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | 2020 நவம்பர் 11 ஆந் திகதிய இலக்கம் GCP/AO/8-4 என்ற ஆளுநரின் செயலாளரின் கடிதத்தின் படி ஆளுநரின் அங்கீகாரத்தில் திருத்தப்பட்ட நிதி விதி 422 இன் பிரகாரம் பெறுகைக் குழு வரையறை திருத்தத்தின் பிரகாரம் ரூபா 03 மில்லியனுக்குக் குறைந்த பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யும் போது 05 நிறுவனங்களுக்குக் குறையாத எண்ணிக்கையில் கூறுவிலை கோர வேண்டியிருந்த போதும் மீளாய்வாண்டில் சிங்களம், இந்து புது வருடத்திற்காக பாதுகாப்பு சேவையினதும் மற்றும் சுத்திகரிப்பு சேவையிலும் ஈடுபடுகின்ற பதவியணியினருக்கு உலர் உணவுப் பொருள் பொதிகள் வழங்குவதற்காக 02 நிறுவனங்களிலிருந்து கூறுவிலை கோரி ரூபா 1,339,380 உலர் உணவுப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | அரசாங்கத்துடன் இணைந்த 02 நிறுவனங்களான சதொஷ மற்றும் வ/ப மத்திய மாகாண கூட்டுறவு சேவை சங்கங்களில் இருந்து கூறுவிலை கோரப்பட்டுள்ளது. | நிதி விதி மற்றும் உரிய கடிதத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | 2020 ஆகஸ்ட் 26 ஆம் திகதிய இலக்கம் DMA/GL/PC/2020 என்ற முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் மாகாண உள்ளகக் கணக்காய்வு வழிகாட்டி இலக்கம் 01 மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 41(1) மற்றும் (2) பிரிவுகளில் காண்பிக்கப்பட்டுள்ள நியதிகளுக்கு இணங்க நிறுவனத்தால் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஸ்தாபித்து கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | பிரதம செயலகத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு பங்குபற்றி உள்ளது. | தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் மாகாண உள்ளகக் கணக்காய்வு வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | மத்திய மாகாண வலய பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்திற்குரிய 04 வாகனங்கள் தொடர்பான ஆவணங்கள் நாளதுவரையாக பேணிச் செல்லப்படாதிருந்ததுடன் அந்த வாகனங்களின் பெறுமதி மதிப்பீடு | பதிலளிக்கப்படவில்லை. | வாகனங்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | | வேண்டும். |

**1.5.7 தலைப்பு 550 - பிரதம அமைச்சு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | போக்குவரத்து மற்றும் கல்வி அமைச்சின் நிதி கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 8,000,000 ஆன மோட்டார் வாகனம் ஒன்றின் பதிவு உரித்து தனியார் தரப்பினரின் பெயரில் இனங்காணப்பட்டது. | நிதிக் கூற்றுக்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பதிவின் உரித்தை மாற்றுவதற்குரிய காரணத்தைக் கண்டறிந்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2002 பெப்ரவரி 25 ஆம் திகதிய இலக்கம் 01/2022 என்ற அரச நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் பிரதம அமைச்சிற்குரிய 11 வாகனங்களின் அரச இலட்சனைகளை இடல் மற்றும் மாகாணங்களின் கதவில் நிறுவனத்தின் பெயர் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஆலோசனையின்படி அரச இலட்சினை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பிரதம அமைச்சிற்குரிய 01 வாகனம் தொடர்பான ஆவணங்கள் நாளதுவரையாக பேணிச் செல்லப்படாதிருந்ததுடன் வாகனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | ஆவணங்கள் நாளதுவரையாக்கப் படவேண்டியிருந்ததுடன் வாகனங்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | பிரதம அமைச்சிற்குரிய ஓட்டத்திலிருந்து நீக்கப்பட்ட 01 வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரித்து பிரதம செயலாளருக்கு காணப்படுகின்ற மையால் உரித்தை கையளிப்பதற்காக பிரதம செயலாளருக்கு அறிக்கப்பட்டுள்ளது. | விற்றுத் தீர்க்கும் நடவடிக்கைகள் கால ரீதியில் நிறைவேற்றப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) நட்ட இழப்பு ரூபா 128,073 ஆன 03 வாகன விபத்துக்குள் தொடர்பாக நிதி விதி 54 இன் பிரகாரம் ஆரம்பம் மற்றும் இறுதி பரிசோதனைகள் மேற்கொண்டு பொறுப்புவாய்ந்த தரப்பினர் இனங்காணப்பட்டிருக்கவில்லை. மேலும் 03 வாகன விபத்துக்களில் ரூபா 23,821 நட்ட இழப்பு மாகாண சபை நிதியத்திலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் 02 விபத்துக்களுக்குரிய ஆரம்பம் மற்றும் இறுதி பரிசோதனைகள் மேற்கொண்டு பொறுப்புவாய்ந்த தரப்பினரை இனங் கண்டு அந்த நட்ட இழப்புக்களில் ரூபா 76,090 தொகை பதிவழிக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | நிதி விதியின் பிரகாரம் நட்ட இழப்பை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.7.1 மாகாண நூலக சேவை சபை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நூலக சேவை சபை அமைந்துள்ள கட்டிடத்தில் தரைமாடி மற்றும் முதலாவது மாடியில் 1,200 சதுர அடி நிலப்பகுதி எழுத்து மூல உடன்படிக்கையின்றி 2018 ஆகஸ்ட் 03 ஆம் திகதி முதல் மாதாந்த வாடகை அடிப்படையில் வலய பொருளாதார அபிவிருத்தி அலகின் கணனி ஆய்வு கூடமொன்று பேணிச்செல்வதற்காக வழங்கப்பட்டிருந்த போதிலும் 2018 ஆகஸ்ட் 03 ஆந் திகதி முதல் 2023 திசெம்பர் 31 வரையான காலத்திற்காக கூட்டு மொத்தமாக ரூபா 4,925,234 வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நூலக சேவை சபைக்குரிய 01 வாகனம் தொடர்பாக ஆவணங்கள் நாளதுவரையாக பேணிச் செல்லப்படாதிருந்ததுடன் அந்த வாகனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | ஆவணங்கள் நாளதுவரையாக்கி வாகனத்தின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

**1.5.7.2 முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி அலகு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------------- | ------------------------------ | ------------------------------ |
| (அ) | 2015 இன் 03 ஆம் இலக்க மத்திய மாகாண சபையின் முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி விஞ்ஞாபனத்தின் II ஆம் பகுதியின் 16 ஆம் பிரிவின் பிரகாரம் முகாமைத்துவக்குழுவின் பணிகளை பேணிச்செல்வதற்காக தேவையான ஆலோசனை மற்றும் வழிகாட்டல்கள் வழங்குவதற்காக பத்தொன்பது பேரை உள்ளடக்கிய ஆலோசனைக் குழுவொன்று நியமிக்கப் படவேண்டியிருந்த போதிலும் விஞ்ஞாபனம் அங்கீகரிக்கப்பட்ட திகதி முதல் கடந்த 08 வருட காலத்தில் ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | விஞ்ஞாபனத்தின் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2018 முதல் 2023 வரையான காலத்தில் முன்பள்ளி அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக அரச சார்பற்ற செயற்திட்டத்திறகாக அரசசார்பற்ற 03 நிறுவனங்களிலிருந்து வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளில் ரூபா 3,033,556 உரிய நோக்கம் இடப்பட்ட பணிகளுக்கு ஈடுபடுத்தப்படாமல் வருமானத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | கிடைத்த நிதி ஏற்பாடு உரிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக செலவிடப்படல் வேண்டும். |

## 1.5.8 தலைப்பு 551 - உள்ளூராட்சித் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 09 உள்ளூராட்சி நிறுவனங்களின் 11 மோசடிகள் தொடர்பாக ஆரம்ப விசாரணைகள் நடாத்துவதற்கு உரிய குழு நியமிக்கப்பட்டு 02 மாதங்கள் முதல் $03^1/_2$ வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த போதும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஆரம்ப விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 03 மாதங்களை விஞ்சிய அறிக்கையை விரைவாக வழங்குமாறு உரிய குழு அங்கத்தவர்களுக்கு கடிதம் மூலம் அறிவிக்கப் பட்டுள்ளது. தற்போதை செயல் முன்னேற்றத்தின் பிரகாரம் 07 அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | ஆரம்ப விசாரணை நடவடிக்கைகளை விரைவாக மேற்கொண்டு பூர்த்தி செய்யுமாறு ஆரம்ப விசாணை அறிக்கை பூர்த்தி செய்து ஆரம்ப விசாரணை அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) 2013 முதல் 2022 வரையான காலப் பகுதியில் 06 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உரியதாக விநியோகிக்கப்பட்ட 15 கணக்காய்வு மிகைக் கட்டணங்களின் கூட்டுமொத்தம் ரூபா 9,704,687 தொகையை அறவிடுவதற்கோ அல்லது சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கோ மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அறவிடலின் செயல் முன்னேற்றத்தின் பிரகாரம் மேலும் அறவிடுவதற்குரிய தொகை ரூபா 9,704,687.32 ஆகும். | மிகைக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மாகாண நிதி விதி 54.1.2, 54.1.3 மற்றும் 54.1.6 உள்ளூராட்சித் திணைக்களத்திற்குரிய 03 வானங்களுக்கு ஏற்பட்ட ரூபா 909,027 ஆன வாகன விபத்துக்கள் தொடர்பாக நட்ட இழப்பை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காப்புறுதியிலிருந்து மீளளிப்புச் செய்யப்படுவதாகவும் காப்புறுதியிலிருந்து மீளளிப்புச் செய்யப்படாத பகுதியை உரிய பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடப்படும். | காப்புறுதியிலிருந்து மீளளிப்புச் செய்தல் மற்றும் உரிய பொறுப்புவாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடல் தொடர்பான உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | மாகாண நிதி விதி 54.5 மற்றும் 54.6 இற்கு இணங்காத வகையில் உள்ளூராட்சித் திணைக்களத்தின் வாகன விபத்துக்களுக்குரியதாக ஏற்பட்ட ரூபா 10,932 நட்ட இழப்புத் தொடர்பாக 2023 யூன் 30 ஆந் திகதி வரையிலும் எந்தவொரு ஆரம்ப பரிசோதனையோ அல்லது இறுதிப் பரிசோதனையோ நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 104(4) பரிசோதனையை நடாத்தி அறிக்கை வழங்கப்படும். | நிதி விதியின் பிரகாரம் நடாத்தப்பட்ட பரிசோதனைகளின் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (உ) | 2002 பெப்ரவரி 25 ஆம் திகதிய இலக்கம் 01/2002 என்ற அரச நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளூராட்சித் திணைக்களத்திற்குரிய 14 வாகனங்களில் அரசாங்க இலட்சினையை இடுதல் மற்றும் வாகனத்தின் கதவில் நிறுவனத்தின் பெயர் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் ஆலோசனையின் படி அரச இலட்சினை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு இணங்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | உள்ளூராட்சித் திணைக்களத்திற்குரிய 11 வாகனங்கள் தொடர்பான பதிவேடுகள் நாளதுவரையாக பேணிச் செல்லப்படாதிருந்ததுடன் அந்த வாகனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பதிவேடுகளை நாளதுவரையாக்கி வாகனங்களின் பெறுமதியை மதிப்பிட்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

**1.5.9 தலைப்பு 552 - கல்வித் திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | --------------------------------------------- | ------------------------------ | ------------------------------ |
| (அ) | நிதி விதி 179.1 இன் பிரகாரம் காசோலை காசாக்குவதற்குரிய தரப்பினருக்கு நேரடியாக செலுத்தும் இயலுமை காணப்படும் போது கலெவெல மத்திய மாகாவித்தியாலயத்தின் அதிபரால் 2021 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரை பகல் பாதுகாவலர், இரவு பாதுகாவலர் மற்றும் சுகாதார தொழிலாளர்கள் போன்ற பதவிகளில் ஈடுபடுகின்ற நபர்களுக்குரிய மொத்த சம்பளம் ரூபா 1,843,850 தொகை 23 சந்தர்ப்பங்களின் போது பாடசாலையில் பகல் பாதுகாவலரின் பெயரில் பாடசாலை அபிவிருத்தி கணக்கின் காசோலை எழுதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 104(4) பரிசோதனை மேற்கொள் ளப்படுகின்றது. எதிர்காலத்தில் கணக்காய்விற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும். | நிதி விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் V ஆம் அத்தியாயத்தின் 7 ஆவது பிரிவின் பிரகாரம் அங்குரன்கெத்த, கட்டுகஸ்தோட்ட, கண்டி மற்றும் கம்பளை போன்ற வலயக் கல்வி அலுலகங்களுக்கு | இரண்டு பேரின் விடுமுறைகள் அங்கீகாரத்திற்காக வழங்கப்பட்ட ஆவணங்களில் குறைபாடுகள் உள்ளதுடன் ஒருவர் வெளிநாட்டு விடுமுறை அங்கீகரிக்கப்பட்டுள்ளமையும் மேலும் ஒருவர் பதவியை விட்டுச் சென்றதாகக் கருதி நடவடிக்கை | தாபனவிதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நியமிக்கப்பட்டு சேவையாற்றுகின்ற 09 உத்தியோகத்தர்கள் முறையான அங்கீகாரமின்றி வெளிநாடு சென்றிருந்த போதிலும் அந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்பட்டுள்ளமையும் எஞ்சியுள்ளவரின் வெளிநாட்டு விடுமுறை தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபனவிதிக்கோவையின் XXX ஆம் அத்தியாயத்தின் 1.4 ஆம் பிரிவின் பிரகாரம் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் மத்திய மாகாணக் கல்வித் திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த 12 உத்தியோகத்தர்கள் 2019 ஆம் ஆண்டு முதல் 2023 சனவரி வரையான காலத்தில் வ/ப மத்திய மாகாண கல்வி சேவை தயாரித்தல் மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர் சபை கூட்டங்களுக்கு தமது கடமை நேரத்தில் பங்குபற்றி கூட்டுமொத்தமாக ரூபா 3,674,354 படிகளை பெற்றிருந்தனர். | மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனை முடிவடைந்தவுடன் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | தாபனவிதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மத்திய மாகாணத்தின் 10 வலயங்களில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்கள் மற்றும் ஏனைய பதவியணியினரில் 235 உத்தியோகத்தர்களின் சேவை 11 மாதங்களுக்கும் 32 வருடங்களுக்கும் இடையிலான காலப்பகுதியிலிருந்து நிரந்தரமாக்கப்பட்டிருக்கவில்லை. | 67 பேர்களின் சேவை நிரந்தரமாக்கப்பட்டுள்ளது. 25 பேர்களின் நிரந்தரமாக்குவதற்காக அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. எஞ்சியுள்ளவரின் குறைபாடுகள் தயாரித்து எதிர்காலத்தில் நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பதவியணியினர் முகாமைத்துவ நடவடிக்கைகளை காலரீதியிலும் முறையாகவும் மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (உ) | நுவரெலியா மற்றும் கண்டி வலயங்களில் சேவையாற்றுகின்ற 05 உத்தியோகத்தர்கள் மற்றும் பயிலுநர் அல்லாத சேவையில் மூன்று பதவிகளுக்கு உரிய | கண்டி வலயத்தில் மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கான ஆலோசனை பிரதம அமைச்சு செயலாளரிடம் கோரப்பட்டுள்ளது. | பதவிகளுக்குரிய அடிப்படை தகைமைகள் பூர்த்திசெய்யாமல் தற்போது சேவையில் ஈடுபடுகின்றவர்கள் |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படைத் தகைமைகள் பூர்த்தி செய்யப்படாதிருக்கும் போது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | நுவரேலியா வலயத்தின் ஆசிரியர் உதவியாளர் உத்தியோகத்தரின் தகைமைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதாகவும் ஒரு ஆசிரியரின் சேவையை முடிவுறுத்துவதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. | தொடர்பாக முறையான மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | ம.மா/கண்டி/வித்தியாலோக மகா வித்தியாலயத்தில் 2021 மார்ச் 18 ஆந் திகதி முதல் சேவையாற்கின்ற கணித ஆசிரியருக்கு கற்பித்தலுக்காக கால அட்டவணை வழங்காதிருக்கும் போது பாடசாலையில் கல்வி நடவடிக்கையில் ஈடுபடாதிருக்கின்ற ஏனைய வெளிவாரி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டு கடமை நிறைவேற்றப்படாமல் 2021 மார்ச் முதல் 2023 சனவரி வரையான காலத்தில் சம்பளமாக ரூபா 2,146,072 செலுத்தப்பட்டிருந்தது. | 104(3) பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது. | பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றாமல் செலுத்தப்பட்ட சம்பளம் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | கம்பளை மற்றும் கண்டி வலயங்களுக்குரிய பாடசாலைகளில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்கள் மற்றும் 27 ஏனைய ஊழியர்களுக்கு வெளிநாட்டு விடுமுறை வழங்கி வெளிநாடு சென்றமை மற்றும் பதவியை விட்டுச் சென்றிருந்த போதிலும் அது தொடர்பாக அதிபர்களினால் முறையான பிரகாரம் வலய பணிப்பாளருக்கு அறிவிக்கப்படாமையின் காரணமாக ரூபா 854,912 சம்பளம் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | பணத்தை அறவிடுதல் தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மேலதிகமாக செலுத்தப்பட்ட சம்பளம் அதற்குரிய பொறுப்புவாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடப்படல் வேண்டும். |
| (ஏ) | அங்குராங்கெத்த வலயக் கல்வி அலுவலகத்தில் இடம்பெற்ற சம்பளம் சம்பந்தமான நிதி மோசகளுக்குரிதாக பிரதம செயாளரினால் நியமதிக்கப்பட்ட | ஆசிரியர் சேவையின் உத்தியோகத்தர்கள் இருவர் மற்றும் பாடசாலை தொழிலாளர்கள் முறையான பிரகாரம் குற்றப் | தாபனவிதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விசாரணை சபையின் அறிக்கையின் பிரகாரம் ஆசிரியர் சேவையில் இருவரும் மற்றும் பாடசாலை தொழிலாளர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுத்தல். மற்றும் மேற்பார்வை மட்டத்தில் 07 உத்தியோகததர்களுக்கு தாபனவிதிக்கோவை II ஆம் தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 25 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடைமுறையின் கீழ் உரிய நடவடிக்ககைள் எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உரிய பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பத்திரிகையை கையளித்து ஒழுக்காற்று பரிசோதனைக்காக நியாய சபை நியமிக்கப்பட்டிருந்ததுடன் ஆவணங்களில் காணப்படுகின்ற குறைபாடுகளின் காரணமாக பரிசோதனை நடவடிக்கைகள் தாமதமடைந்திருந்தது.<br><br>மேற்பார்வை மட்டத்தில் 07 உத்தியோகர்கள் தொடர்பாக தாபனவிதிக்கோவை II ஆம் தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 25 ஆம் பிரிவின் பிரகாரம் ஒருவருக்கு 2023 நவம்பர் 07 ஆந் திகதிய கடிதம் மூலம் எச்சரிக்கை செய்து மூன்று பேருக்கு 2023 ஒக்டோபர் 16 ஆந் திகதிய கடிதம் மூலம் ஒழுக்காற்று பரிசோதனையின் கீழ் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஐ) | கலேவல மத்திய மகா வித்தியாலயத்தில் மீளாய்வாண்டிலும், கடந்த 02 ஆண்டுகளின் போதும் தனியார் நிறுவனமொன்றிலிருந்து கட்டிடப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான செலுத்துதலாகக் காண்பிக்கப்பட்டு போலியான பட்டியல் தயாரித்து பாடசாலை அபிவிருத்தி நிதியத்தில் இருந்து கூட்டுமொத்தமாக ரூபா 710,533 ஆன 07 காசோலைகள் பாடசாலையின் முன்னாள் அதிபரினதும், அவரின் மனைவியினதும் வங்கிக் கணக்குகளுக்கு செலவுவைத்து மோசடியொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இது தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(4) பரிசோதனை நடாத்தப்பட்டது. அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கணக்காய்விற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும். | நிதி மோசடிகள் தொடர்பாக திணைக்களம் பரிசோதனைகளை மேற்கொண்டு உரிய சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | க/புனித மரியாள் கல்லூரியின் முன்னாள் அதிபர் பாடசாலைக்குரிய வேன் வண்டியைப் பயன்படுத்தி 2018 சனவரி 15 ஆந் திகதி முதல் 2023 யூன் 16 ஆம் திகதி வரை பாடசாலைக்கு வருவதற்கும் செல்வதற்கும் நாளொன்றுக்கு 04 பிரயாணத் தடவைகள் வீதம் ஒரு நாளைக்கு 112 கிலோ மீற்றர் வீதம் பிரயாணம் செய்வதற்காக பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் மூலம் அங்கீகாரம் இன்றி கூட்டுமொத்தமாக ரூபா 1,283,037 தொகை அண்ணளவான தொகையொன்று எரிபொருளுக்காக செலவிடப்பட்டிருந்தது. | இது தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(4) பரிசோதனை நடாத்தப்பட்டது. அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி விதியின் பிரகாரம் மற்றும் தாபனவிதிக்கோவையில் காணப்படுகின்ற ஏற்பாடுகளின் பிரகாரம் மோசடிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஓ) | க/ஹெ/நிஸ்ஸங்கமல்ல ஆரம்ப பாடசாலை 2016 ஆம் ஆண்டின் நிசங்கமல்ல இரட்டை பாடசாலையாக ஒதுக்கப்பட்டு இடமொன்றில் 60’x20’ அங்குலம் அளவில் கட்டிடம் ஒன்றில் வகுப்பு ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அந்தக் கட்டிடத்தின் கூரை உடைக்கப்பட்டு 80’x25’ இரண்டு கட்டிம் நிர்மாணிப்பதற்காக ரூபா 15,700,655 மதிப்பீட்டில் 2021 ஆகஸ்ட் 16 ஆந் திகதி ஒப்பந்தகார நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்து பிரதி மாகாணப் பணிப்பாளர் (கட்டிடம்) இனால் நிர்மாணம் கையளித்து 2021 திசெம்பர் 28 ஆம் திகதி வரையில் ஒப்பந்தத்தைப் பூர்த்தி செய்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. எனினும் ஒப்பந்தகாரரால் ஆரம்ப மதிப்பீட்டில் உள்ளடக்கப்படாதிருந்த பக்கச்சுவர் நிர்மாணம் மற்றும் | பதிலளிக்கப்படவில்லை. | ஏற்பட்ட மோசடிகள் தொடர்பாக நிதிவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மதிப்பீட்டில் உள்ளடக்கப் பட்ட விடயங்களில் 19 கொங்கிறீட் தூண்கள் மாத்திரம் நிர்மாணித்து ஒப்பந்தம் கைவிடப்பட்டிருந்தது. அதன் காரணமாக ஒப்பந்தகாரரை கறுப்பு பட்டியலில் இட்டு மீண்டும் பெறுகை நடவடிக்கைகளில் ஈடுபடாமல் மத்திய மாகாண பிரதம மற்றும் கல்வி அமைச்சின் 2022 ஒக்டோபர் 31 ஆந் திகதி நடைபெற்ற பெறுகைகள் சபைக் குழுக் கூட்டத் தீர்மானத்தின் பிரகாரம் ஒப்பந்தகாரர் மற்றும் பிரதி மாகாணப் பணிப்பாளர் (பொறியியல் சேவைகள் மற்றும் கல்வி கட்டிடம்) இற்கிடையே புரிந்துணர்வின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டிருந்தது. அதுவரையில் ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்ட ரூபா 3,963,395 பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. இந்த பாடசாலையில் 117 மாணவர்கள் கல்வி கற்பதுடன் ஆகக் குறைந்த வசதிகள் காணப்படுகின்ற கைத்தொழில் கட்டிடமொன்று தற்போது கல்வி கற்றல்கள் மேற்கொள்ளப்படுவதை காணக்கூடியதாக இருந்தது. மேலும் இந்த ஆரம்ப கட்டிடத்தை உடைத்து அகற்றும் போது அதில் காணப்பட்ட பெறுமதியான மரங்கள் மற்றும் ஏனைய பொருட்கள் ஒப்பந்தகாரரால் பாடசாலைக்கு கையளிக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு வேலை நிறுத்தப்பட்டிருந்த கட்டிடத்தின் அருகில் காடு வளர்ந்து அழிவடைவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (ஔ) | நு/ஸ்ரீமத் ஜேம்ஸ் பீரிஸ் வித்தியாலயத்தில் மலசல கூட முறைமையை நிர்மாணிப்பதற்காக சாதாரண கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்தின் (GEMP) கீழ் ஆண்டில் ரூபா 1,460,000 நிதி ஏற்பாடு வழங்கி அதில் ரூபா 733,525 செலவிடப்பட்டு உரிய செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாமல் நிர்மாண செயற்பாடுகள் கைவிடப்பட்டிருந்தன. | பதிலளிக்கப்படவில்லை. | உரிய செயற்திட்டத்திற்குரிய திட்டமிடப்பட்ட பணிகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (க) | மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் 189 பாடசாலைக் கட்டிடங்களுக்காக மீளாய்வாண்டில் இறுதியில் ரூபா 771,065,663 செலவிடப்பட்டிருந்த போதிலும் நிர்மாணங்கள் பூர்த்திசெய்யப்படாமையின் காரணமாக உரிய கட்டிடத்தைப் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | முழுமையாக கட்டிடம் அன்றி கட்டம் கட்டமாகவேனும் நிறைவேற்றுவதற்காக வருடாந்த நிதி ஏற்பாடு ஒதுக்கப்படுகின்றது. | நிர்மாணங்களைப் பூர்த்தி செய்து கட்டிடங்களைப் பயன்படுத்துதல் வேண்டும். |
| (கா) | 2018 முதல் 2022 வரையான காலப்பகுதியில் க.பொ.த.(சா.தரம்) பரீட்சைக்குத் தோற்றியிருந்த மத்திய மாகாண மாணவர்களின் பெறுபேறுகளின் பிரகாரம் நாடளாவிய ரீதியில் மாகாண வெற்றி மட்டம் 05 இற்கும் 08 இற்கும் இடையிலான இடத்திற்கு உட்பட்டிருந்த மேலும் அந்தப் பெறுபேறுகளின் பிரகாரம் மத்திய மாகாணத்தில் 15 வலயங்களில் 10 வலயங்களின் பெறுபேறுகள் நாடளாவிய வலய மட்டத்தின் பிரகாரம் 50 ஆவது இடத்தில் உயர்வடைந்திருந்தது. | மத்திய மாகாணத்தில் பெறப்பட்டுள்ள 72.73 சதவீத பெறுபேறுகளின் மட்டம் குறைவான மட்டத்தில் காணப்படுகின்றதை அறியத்தருகின்றோம் 50 ஆவது இடத்தை ஏற்றுக் கொள்கின்றோம். சித்தியடையாத மட்டத்தில் இருக்கின்ற மாணவர்களை சித்திபெறச் செய்வதற்காக வலயக் கல்வி பணிப்பாளருடன் உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளது. | மாணவர்களின் பெறுபேறுகளை உயர்வடையச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கி) | மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் 2018 முதல் 2022 வரையான காலப் பகுதியில் நடைபெற்ற மற்றும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் மத்திய மாகாணத்திற்கு தோற்றியிருந்த மாணவர்களை 70 புள்ளிகளைப் விஞ்சி பெற்றுக்கொள்ளும் சதவீதத்தின் பிரகாரம் மத்திய மாகாணம் நாடளாவிய சித்தி மட்டத்தில் ஏழாவது மற்றும் எட்டாவது இடங்களுக்கு உட்பட்டிருந்தது. அவ்வாறே இந்த பெறுபேறுகளின் பிரகாரம் மத்திய மாகாணத்தில் 15 வலயங்களில் 11 வலயங்களின் பெறுபேறுகள் நாடளாவிய வலய மட்டத்தின் பிரகாரம் ஐம்பதாகவது இடத்திற்கு முன்னேறியிருந்தது. | 70 புள்ளிகளுக்குக் குறைந்த சதவீதம் வருடாந்தம் 19 இற்கும் 25 சதவீதத்திற்கும் இடையில் இருந்தது. இந்த சதவீதத்தைக் குறைத்துக் கொள்வதற்காக பல்வேறு செயற்பாடுகள் வருடாந்தம் ஒழுங்குபடுத்தப்படுகின்றது. தேசிய மட்டத்துடன் ஒப்பீடு செய்யப்பட்ட 2.2.1 சிறிய அளவாக இருந்ததுடன் அது குறிப்பாக காணப்படுகின்ற குறைவாக கவனத்திற்கொள்ள முடியாது. | நாடளாவிய திறன் மட்டத்தில் மற்றும் வலய மட்டத்தில் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கீ) | 2002 பெப்ரவரி 25 ஆம் திகதிய இலக்கம் 01/2022 என்ற அரச நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் கல்வித் திணைக்களத்திற்குரிய 24 வாகனங்கள் அரசாங்க இலட்சினை இடுதல் மற்றும் வாகனங்களின் கதவுகளில் நிறுவனத்தின் பெயர் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றிக்கையின் ஆலோசனையின் படி அரச இலட்சனை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு இணங்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கு) | கல்வித் திணைக்களத்திற்குரிய வாகனங்கள் மற்றும் 05 மோட்டார் சைக்கிள்கள் தொடர்பான பதிவேடுகள் நாளதுவரையாக பேணிச்செல்லப்படாதிருந்ததுடன் அந்த வாகனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | ஆவணங்களை நாளதுவரையாக்கி வாகனங்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.5.10 தலைப்பு 553 - மாகாண காணித் திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாணக் காணித் திணைக்களத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற காணி வாடகை வருமான அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள 36 பிரதேச பிரிவுகளில் கூட்டுமொத்தமாக ரூபா 68,561,923 காணி வாடகை வாடகையாளர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. அதில் கூட்டுமொத்தமாக ரூபா 62,627,387 நிலுவை வாடகை வருமானமொன்று 07 பிரதேச செயலகத்திற்கு உரியதாக இருந்ததுடன் அந்தப் பெறுமதி அறவிட வேண்டிய மொத்த நிலுவை வருமானத்தில் 91 சதவீதம் ஆன உயர் பெறுமதியைக் கொண்டிருந்தது. அதன் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவிடுதலின் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான மட்டத்தில் காணப்பட்டது. | காணி வாடகை நிலுவை வருமானத்தை அறவிடுதல் பிரதேச செயலகத்தில் மேற்கொள்ளப் படுவதுடன் அது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மத்திய மகாணத்தின் காணி நலனாளிகளின் பிரச்சினைகளுடன் காணி தொடர்பான மீளாய்வாண்டின் காணித் திணைக்களத்திற்கு அளவிடல் கோரிக்கை 903 கிடைத்திருந்ததுடன் அதில் கண்டி மாவட்டத்தில் கிடைக்கப்பெற்ற 670 கோரிக்கைகளுக்கு இடைய மிளாய்வாண்டில் 55 கோரிக்கைகள் மாத்திரம் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. | நில அளவையாளர் நாயகத்தின் மீதி உத்தியோகத்தர் சுற்றறிக்கை 6/2007 இன் பிரகாரம் பொது சராசரியாக நில அளவையாளர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு பூர்த்திசெய்யக்கூடிய அளவிடல்களின் கோரிக்கை 04 ஆகும். | அளவிடல் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 22 பிரதேச செயலகப் பிரிவுகளில் தெரிவுசெய்யப்பட்ட 50 பாடசாலைகளில் காணி கைப்பற்றும் நோக்கில் 2010 ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலத்தில் கூட்டு மொத்தமாக ரூபா 64,263,189 பிரதேச செயலகங்களுக்கு நிதி ஏற்பாடு ஒதுக்கி 01 முதல் 13 வருடங்கள் வரையிலான காலம் கடந்திருந்த போதிலும் அந்த காணியைக் கைப்பற்றுவதற்கு முடியாதிருந்தது. | 08 பாடசாலைக் காணிகளைக் கைப்பற்றும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்ட 50 பாடசாலைகள் காணிகளை கைப்பெற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. | காணி கைப்பற்றும் நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 02 பிரதேச செயலக பிரிவுகளில் அமைந்துள்ள 03 நீர்மின் வலுக்கூடம் 03 முதல் 20 வருடங்கள் வரையிலான கால எல்லையில் இருந்து மின்சார உற்பத்தி செய்து தேசிய முறைமைக்கு மின்சாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட போதும் அந்த வலுக்கூடத்திற்காக மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் நீர் திறத்தல் அனுமதி பத்திரம் விநியோகித்து வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் ரூபா 4,668,164 வரி வருமானம் மாகாண காணித் திணைக்களத்திற்கு இழக்கப்பட்டிருந்தது. | வரி அறவிடப்படவில்லை. | வரி அனுமதிப் பத்திரம் முறையாக விநியோகித்து வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | காணி திணைக்களத்திற்குரிய 01 வாகனம் தொடர்பாக பதிவேடு நாளதுவரையாக பேணிச் செல்லப்படாதிருந்ததுடன் அந்த வாகனத்தின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | மதிப்பீடு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆவணங்களை நாளதுவரையாக்கி வாகனங்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஊ) மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்யும் திணைக்களம் மற்றும் மாகாண போக்குவரத்து திணைக்களத்தின் தரவு முறைமையிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் மாகாண காணித் திணைக்களத்திற்குரிய 01 வாகனம் தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் அந்த வாகனம் மத்திய மாகாண சபையின் நிறுவனத்தினால் பயன்படுத்தப்பட்டமைக்கு எந்தவித சான்றுகளும் சமர்ப்பிக்கப்படவில்லை. | தகவல்கள் கண்டறிந்து அறிக்கையிடப்படும். | வாகனம் தொடர்பான தகவல்கள் உரிய பிரகாரம் பேணிச்செல்வதற்கும் உரிய தகவல்களை சேகரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.11 தலைப்பு 554 - கலாசார அலுவல்கள் திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்குரிய 01 வாகனம் தொடர்பான ஆவணங்கள் நாளதுவரையாக பேணிச் செல்லப்படாதிருந்ததுடன் அந்த வாகனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரித்தினைக் கையேற்ற பின்னர் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆவணங்களை நாளதுவரையாக்கி வாகனங்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.12 தலைப்பு 555 - மாகாண பொறியியல் சேவைகள் திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இசுருபாய கல்வி அமைச்சின் கீழ் அமுல்படுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட ரூபா 31,650,000 ஆன 02 வேலைகளும், ஏனைய நிதியத்தின் கீழ் நுவரெலியா மாவட்டத்தில் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட ரூபா 239,619,000 ஆன 25 செயற்திட்டங்களும் HSEP | பதிலளிக்கப்படவில்லை. | திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

செயற்திட்டத்தின் கீழ் மத்திய மாகாணத்தின் சுகாதார துறையில் அமுல்படுத்துவதற்கு மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 421,321,000 ஆன 33 செயற்திட்டங்களும் மீளாய்வாண்டின் போது பொறியியல் சேவைகள் திணைக்களம் அமுல்படுத்தியிருக்கவில்லை.

### 1.5.13 தலைப்பு 556 - மாகாண சுற்றுலா அலுவல்கள் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மாத்தளை சுற்றுலா மேம்படுத்தல் கட்டிடத் தொகுதி நிருவகிக்கின்ற நிருவாக சபையின் கூட்ட தீர்மான இலக்கம் 07 இன் பிரகாரம் மாதமொன்றிற்கு ரூபா 1,000 அறவிட்டு மாத்தளை ஹோட்டல் பாடசாலை சமையலறை மற்றும் 02 வகுப்பறைகள் வலய பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்திற்கு வழங்குவதற்கு 2012 மார்ச் 16 ஆந் திகதி தீர்மானிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக 2023 திசெம்பர் 06 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் பிரகாரம் அங்கீகாரம் மற்றும் வாடகை செலுத்தாமல் 4000 சதுர அடியுடன் முழுமையாக ஹோட்டல் பாடசாலையும் வலய பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் பயன்படுத்திருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே சட்ட ரீதியான மதிப்பீட்டின் அடிப்படையில் எழுத்து மூல உடன்படிக்கையின்றி மாத்தளை ஹோட்டல் பாடசாலை வலய பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் 10 வருடங்களை விஞ்சி பயன்படுத்தியதன் | ஏற்றுக்கொள்கின்றோம். பிரதம அமைச்சின் செயலாளர் ஆலோசனை கோரப்பட்டுள்ளது. | நிருவாக சபையின் கூட்டத் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கும், இழக்கப்பட்ட வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக மாகாண சுற்றுலா அலுவல்கள் திணைக்களத்திற்கு உழைக்கக் கூடியதாக இருந்த ரூபா 25 மில்லியன் அளவிலான வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | சுற்றுலா அலுவல்கள் திணைக்களத்தால் 2016 ஆம் ஆண்டில் ரூபா 7,948,336 செலவினம் ஒன்றைச் செய்து ரங்கீரி தம்புலு ரஜமஹா விகாரைக்குரிய காணி, தம்புள்ள ஆயுர்வேத சுவதா நிலையம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் 07 வருட காலம் கடந்திருந்த போதிலும் காணியின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் ஸ்தாபிக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்ற முடியாமல் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையும் இந்த ஆயுர்வேத சுவத்தா நிலையம் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | தம்புள்ள ஆயுர்வேத சமூக சுகாதார சேவை உத்தியோகத்தரின் பரிந்துரை ஆயுர்வேத சுவத்தா நிலையமொன்றை அபிவிருத்தி செய்வதற்காகும். நிலையம் ஆயுர்வேத திணைக்களத்திற்கு கையளிக்குமாறு சுகாதார செயலாளருக்கும், தம்புள்ளை மாநகர சபைக்கு கையளிப்பதற்கும் கோரப்பட்டுள்ளது. | காணியின் உரித்தை கையேற்பதற்கும் ஆயுர்வேத நிலையமொன்றை பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2002 பெப்ரவரி 25 ஆம் திகதிய இலக்கம் 01/2002 என்ற அரச நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் சுற்றுலா அலுவல்கள் திணைக்களத்திற்குரிய 01 வாகனம் அரசாங்க இலட்சினை இடுதல் மற்றும் வாகனங்களின் கதவில் நிறுவனத்தின் பெயர் குறிப்பிடுதல் மற்றும் ஆவணங்களை நாளதுவரையாக பேணிச்செல்வற்கும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் | சுற்றறிக்கையின் ஆலோசனையின்படி அரசாங்க இலட்சினை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் கெப் வண்டியைக் கையேற்ற பின்னர் மதிப்பீட்டுப் பெறுமதியை கணக்கீடு செய்யப்படும். | சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்து வாகனப் பதிவேட்டை நாளதுவரையாக்கி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அந்த வாகனத்தின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.

**1.5.14 தலைப்பு 557 - கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2002 பெப்ரவரி 25 ஆம் திகதிய இலக்கம் 01/2002 என்ற அரச நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்திற்குரிய 06 வாகனங்களில் அரசாங்க இலட்சினை இடுதல் மற்றும் வாகனங்களின் கதவில் நிறுவனத்தின் பெயர் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஆலோசனையின் படி அரசாங்க இலட்சினை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) நட்ட இழப்பு ரூபா 40,028 ஆன 01 வாகன விபத்து தொடர்பாக நிதி விதி 54 இன் பிரகாரம் ஆரம்பம் மற்றும் இறுதி பரிசோதனைகள் மேற்கொண்டு பொறுப்புவாய்ந்த தரப்பினர் இனங் காணப்பட்டிருக்கவில்லை. மேலும் 01 வாகனம் ரூபா 12,723 நட்ட இழப்பு மாகாண சபை நிதியத்திலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | நிதி விதியின் பிரகாரம் உரிய பரிசோதனைகளை நடாத்தி பொறுப்புவாய்ந்த தரப்பபினரிடமிருந்து நட்ட இழப்பை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.15 தலைப்பு 558 - கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிற்குரிய 03 வாகனங்கள் தொடர்பான பதிவேடுகள் நாளதுவரையாக பேணிச்செல்லப்படாதிருந்ததுடன் அந்த வாகனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | ஆவணங்களை நாளதுவரையாக்கி வாகனங்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.5.16 தலைப்பு 560 – சுகாதார அமைச்சு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2002 பெப்ரவரி 25 ஆம் திகதிய இலக்கம் 01/2002 என்ற அரச நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சிற்குரிய 02 வாகனங்களில் அரசாங்க இலட்சினை இடுதல் மற்றும் வாகனங்களின் கதவில் நிறுவனத்தின் பெயர் குறிப்பிடுதல் மற்றும் வாகனப் பதிவேடுகளை நாளதுரையாக பேணிச்செல்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அந்த வாகனங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் அரசாங்க இலட்சினை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், பிரதம செயலாளருக்கு பதிவின் உரித்து காணப்படுவதுடன் விவசாய அமைச்சிற்கு உரித்தைக் கையளிப்பதற்கு இதுவரை தீர்மானம் எடுக்கப்படவில்லை. | சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்து வாகனப் பதிவேடுகளை நாளதுவரையாக்கி மதிப்பீடு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மோட்டார் வாகனங்கள் பதிவு செய்யும் திணைக்களம் மற்றும் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் தரவு முறைமைகளைப் பெற்று தகவல்களின் பிரகாரம் முறைமையிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் சுகாதார அமைச்சிற்குரிய 05 வாகனங்கள் தொடர்பாக தகவல்கள் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் அந்த வாகனங்கள் மத்திய மாகாண சபையின் நிறுவனங்களினால் பயன்படுத்தப்படுகின்றமைக்கும் எந்தவொரு சான்றும் சமர்ப்பிக்கப்படவில்லை. | தகவல்களைக் கண்டறிந்து அறிக்கையிடப்படும். | வாகனங்களின் தகவல்களை சரியான பிரகாரம் பேணிச் செல்வதற்கும் உரிய தகவல்களைச் சேகரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.5.17 தலைப்பு 561 - மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ---------------------------------------------- | ------------------------------- | ------------------------------- |
| (அ) | 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து தொடர்ச்சியாக கொண்டுவரப்படுகின்ற சுகாதார திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 171,988,242 ஆன முற்பண மீதி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தீர்த்துவைத்திருக்கப்பட்டிருக்க வில்லை. | இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்காக கொழும்பு மருத்துவ வழங்கல் பிரிவிலிருந்து எழுத்து மூலத் தகவல்கள் கோரப்பட்டுள்ளது. | முற்பண மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட மாவட்ட மற்றும் பிரதேச வைத்தியசாலைகள் 03 இல் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு 03 மாதங்கள் முதல் 96 மாதங்கள் வரையிலான கால வீச்சில் கூட்டுமொத்தமாக ரூபா 3,250,741 காலாவதியான மருந்து அலகுகள் 452,650 மற்றும் கலகெதர பிரதேச வைத்தியசாலையில் ரூபா 398,280 தரம் கெட்ட மருந்து அலகுகள் 72206 என்பன காணப்பட்டது. | காலாவதியான மருந்துகள் தொடர்பாக மருத்துவ வழங்கல் பிரிவு முன்னின்று அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றது. | மருந்துகள் காலாவதியாதல் மற்றும் தரம்கெடல்களில் அகற்றுவதற்காக மருந்துகளை முறையாகப் பகிர்ந்தளித்தல் மற்றும் இருப்புக்களை உச்சமட்டத்தில் பேணிச் செல்லும் செயற்பாடுகளுக்கு உட்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கண்டி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மூலம் சுகாதார உபரணங்களில் வர்ணம் பூசுவதற்காக பிழையாக செலுத்தப்பட்ட ரூபா 3,114,905 தொகை 2019 மே 09 ஆம் திகதி மத்திய மாகாண பிரதம செயலாளரால் உரிய பொறுப்புவாய்ந்த 14 உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடுவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் அதில் 08 உத்தியோகத்தர்களிடமிருந்து கூட்டுமொத்தமாக ரூபா 1,618,191 மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 08 உத்தியோகத்தர் களிடமிருந்து மேலும் அறவிட வேண்டிய தொகை ரூபா 1,594,455 ஆகும். | மிகைக் கட்டணமிடப்பட்ட தொகையை அறவிடுவதற்கும் உரிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | தெல்தெனிய ஆரம்ப வைத்தியசாலையில் சேவையாற்றிய மருத்துவ உத்தியோகத்தர் 2016 மே 02 முதல் 2021 மே 01 வரையான காலத்தில் சம்பளமற்ற விடுமுறை அங்கீகரித்து வெளிநாடு சென்றிருந்த போதும் 2023 ஒக்டோபர் வரையிலும் சேவைக்கு அறிக்கையிடாதிருந்த மையால் உடன்படிக்கையின் பிரகாரம் அறவிட வேண்டிய ரூபா 1,175,222 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்த வைத்தியசாலையில் மருத்துவ உத்தியோகத்தர் முறையான பிரகாரம் வெளிநாட்டு விடுமுறை அங்கீகரிக்காமல் 2022 யூன் 28 ஆம் திகதி முதல் 2022 ஒக்டோபர் 06 ஆம் திகதி வரை வெளிநாட்டில் இருந்த போதும் அந்த காலத்திற்காக ரூபா 350,325 சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. | மீளச் செலுத்துவதற்கு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. கொடுப்பனவு புறக்கணிக்கப்படுமாயின் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கும் வெளிநாட்டு விடுமுறை அங்கீகிக்கப்படாத காலத்தில் செலுத்தப்பட்ட சம்பளத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் காணப்படுகின் றிக்கில்லகஸ்கட மற்றும் ஹத்தரலியத்த வைத்தியசாலை இரண்டிலும் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் கூட்டுமொத்தமாக ரூபா 2,879,966 ஆன 25074 மருந்து அலகுகளின் பற்றாக்குறை காணப்பட்டது. | அறிக்கையிடப்பட்ட பற்றாக்குறை தொடர்பாக எதிர்காலத்தில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | பற்றாக்குறை தொடர்பாக நிதிவிதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | நுவரெலியா பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் பயன்படுத்துகின்ற பெறுமதி இனங்காண முடியாத நோயாளர் காவும் வண்டியை பதிவு உரித்து தனியார் பெருந்தோட்டக் கம்பனியின் பெயரில் காணப்பட்டது. | அகற்றுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய மாகாண சுகாதார திணைக்களத்திற்கு கையளிக்குமாறு கோரிக்கை இடப்பட்டுள்ளதுடன் தனியார் நிறுவனத்தினால் மீண்டும் அவர்களின் நிறுவனத்திற்கு எடுத்துச் சென்றமைக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | பதிவின் உரித்தை மாற்றுவதற்குரிய தகவல்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (எ) | மாகாண நிதி விதி 54.5 மற்றும் 56.6 இற்கு இணங்காத வகையில் மாத்தளை மற்றும் நுவரெலியா பிரதேச சுகாதார பணிப்பாளர் அலுவலகங்களில் 05 வாகனங்களுக்குரிய விபத்துக்களில் ஏற்பட்ட ரூபா 1,411,172 நட்ட இழப்புக்கள் தொடர்பாக 2023 யூன் 30 ஆந் திகதி வரையிலும் எந்தவொரு ஆரம்ப விசாரணையோ அல்லது இறுதிப் பரிசோதனையோ நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாத்தளை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நிதிப்பிரமாணம் 104(4) பரிசோதனை குழுவொன்று நியமிக்கப்பட்ட போதும் இதுவரை அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. நுவரேலியா பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் 02 வாகனங்களின் இழப்புக்கள் புத்தகத்திலிருந்து பதிவழிக்கப்பட்டுள்ளதுடன் அந்த வாகனம் நிதிப்பிரமாணம் 104(4) பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | நிதி விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | 2016 திசம்பர் 29 ஆந் திகதிய 30/2016 என்ற அரச நிருவாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் கண்டி, மாத்தளை மற்றும் நுவரேலியா பிரதேச சுகாதார பணிப்பாளர் அலுவலகங்களுக்குரிய 129 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவுப் பரிசோதனை குறித்துரைத்த காலத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஆலோசனையின் படி எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | சுகாதார திணைக்களம் மற்றும் கண்டி, மாத்தளை மற்றும் நுவரேலியா பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகங்களுக்குரிய 237 வாகனங்கள் தொடர்பான பதிவேடுகள் நாளதுவரையாக பேணிச் செல்லப்படாதிருந்ததுடன் அந்த வாகனங்களில் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | * கண்டி பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தால் இந்த ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் கணக்கீடு செய்யப்படும்.<br><br>* மாத்தளை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் வாகனமொன்று தம்புள்ள மாவட்ட வைத்தியசாலைக்கு கையளிக்கப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>* நுவரெலியா பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் கணக்கீடு செய்வதற்கு தீர்மானித்துள்ளது. | பதிவேடுகளை நாளதுவரையாக்கி வாகனங்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஒ) | நுவரெலியா பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய வாகனமொன்று விபத்திற்கு உட்பட்டிருந்தது. பழுதுபார்க்கப்படாமல் காணப்பட்டதுடன் அந்தப் பழுதுபார்த்த செலவினம் ரூபா 16,500,000 ஆக இருந்தமை இனங்காணப்பட்டிருந்தது. | உரிய வாகனங்களின் பழுதுபார்ப்பதற்கு ஆக்கபூர்வமாக இல்லாதிருந்ததாக மோட்டார் வாகன பரிசோதகரினால் பரிந்துரை செய்யப்பட்டிருந்ததுடன் நிதிப் பிரமாணம் 104(4) பரிசோதனை அறிக்கையின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கும், காப்புறு நிறுவனத்திலிருந்து ரூபா 6,600,000 தொகையை பெற்றுக்கொள்வதற்கும் எழுத்து மூல இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதி விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்யும் திணைக்களம் மற்றும் மாகாண போக்குவரத்து திணைக்களத்தின் தரவு முறைமையிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் சுகாதார திணைக்களத்திற்குரிய 04 வாகனங்கள் தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் அந்த வாகனங்கள் மத்திய மாகாண சபையின் நிறுவனத்தினால் பயன்படுத்தப்படுகின்றமைக்கும் எந்தவொரு சான்றும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தகவல்களைக் கண்டறிந்து அறிக்கையிடப்படும். | வாகனங்களின் தகவல்களை சரியான பிரகாரம் பேணிச் செல்வதற்கும் உரிய தகவல்களை சேகரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஔ) | சுகாதார சேவைகள் திணைக்களம், பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் கண்டி மற்றும் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவகம் நுவரேலியா 01 வருடத்திற்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான காலம் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்த 18 வாகனங்களை விற்றுத்தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | * சுகாதார சேவைகள் திணைக்களத்தின் 02 வாகனங்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.<br>* கண்டி பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் 02 வாகனங்கள் பழுதுபார்த்து பயன்படுத்தப்படுகின்றது. 03 வாகனங்கள் தொடர்பாக மத்திய அரசாங்கத்தின் சுகாதார அமைச்சிற்கும் 01 வாகனம் கண்டி மாநகர சபைக்கும் கையளிக்கப்பட்டுள்ளதுடன் 02 வாகனங்களை விற்றுத்தீர்க்கும் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.<br>* நுவரெலியா பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் 01 வாகனம் பதிவின் உரித்தாளர் முறையான பிரகாரம் கையளித்துள்ளதுடன் 02 வாகனங்கள் வத்தேகம நகர சபைக்கும் மற்றும் | பயன்படுத்த முடியாத வாகனங்களை விரைவாக விற்றுத்தீர்க்கும் செயற்பாடுகளுக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கொட்டக்கல கேம்பிரீஜ் வித்தியாலயத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது. 01 வாகனம் லிந்துல பிரதேச சுகாதார உத்தியோகத்தர் அலுவலகத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. 01 வாகனம் மீண்டும் பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் 03 வாகனங்களை விற்றுத்தீர்ப்பதற்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது. | |
| (க) | மாத்தளை சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நட்ட இழப்பு ரூபா 2,717,500 ஆன 05 வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதி விதி 54 இன் பிரகாரம் ஆரம்ப மற்றும் இறுதி பரிசோதனைகள் மேற்கொண்டு பொறுப்புவாய்ந்த தரப்பினர் இனங்காணப்பட்டிருக்கவில்லை. மேலும் 03 வாகன விபத்துக்கள் ரூபா 2,235,500 ஆன நட்ட இழப்புவை மீளளிப்பு செய'து கொள்ளப்படாதிருந்ததுடன் மேலும் வாகன விபத்துக்கள் மேலும் 01 வாகன விபத்துக்களின் ஆரம்ப மற்றும் முழுமையான பரிசோதனைகள் மேற்கொண்டு பொறுப்புவாய்ந்த தரப்பினரை இனங்கண்டு அந்த நட்ட இழப்புக்களிகல் ரூபா 698,997 தொகை பதிவழிக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | நிதி விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கா) | நுவரெலியா சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நட்ட இழப்ப ரூபா 16,500,000 ஆன 01 வாகன விபத்து தொடர்பான நிதி விதி 54 இன் பிரகாரம் ஆரம்ப மற்றும் இறுதி பரிசோதனைகள் மேற்கொண்டு பொறுப்புவாய்ந்த தரப்பினர் இனங்காணப்பட்டிருக்கவில்லை. மேலும் 02 வாகன விபத்துக்களின் | பதிலளிக்கப்படவில்லை. | நிதி விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

ஆரம்ப மற்றும் முழுமையான பரிசோதனைகள் மேற்கொண்டு அந்த நட்ட இழப்புக்ளில் ரூபா 333,193 பதிவழிக்கப்படடிருந்தது.

**1.5.18 தலைப்பு 562 – மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆயுர்வேத திணைக்களத்தால் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் தணைக்களத்தின் உள்ளக தொழிலாராக சேவையாற்றிய 26 ஊழியர்களுக்கு மருந்துக் கலவையாளர் பதவி iii தரத்திற்கு சேர்க்கப்பட்டிருந்தன. அவ்வாறே தாதியர் பதவிக்கு நியமிக்கும் போது தாபனவிதிக் கோவையின் தாபன இலக்கம் vii அத்தியாயம் 05.03.01 சம்பளத்தை சீராக்கும் போது பதவி உயர்வு பெறுகின்ற சந்தர்ப்பத்தின் போது உத்தியோகத்தர் இறுதியாகக் கிடைத்த நம்பளம், புதிய சம்பள படிநிலைக்கிடையே காணப்படுமாயின் அன்னளவாக உயர்ந்த சம்பள படி நிலையில் வைத்து மேலதிக சம்பள அதிகரிப்பொன்று மாத்திரம் செலுத்தவேண்டிய போதிலும் நோயாளர் உதவியாளர் ii தரத்தில் ஆரம்ப சம்பளத்தில் வைக்கப்பட்டமையால் 10 சம்பள அதிகரிப்புக்களின் எதிர்காலத்தில் சம்பளம் வைக்கப்பட்டதன் காரணமாக 2014 முதல் 2023 வரையான 10 வருட காலத்திற்காக மேலதிக படி மற்றும் ஏனைய படிகள் தவிர 26 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 4,259,877 மேலதிகமாக செலுத்தப்படடிருந்தது. | சரியான சம்பளத்தில் அமர்த்துதல் முன்னர் மேற்கொள்ளப்பட்ட சம்பள படி நிலைகள் திருத்தப்பட்டுள்ளது. மேலதிக செலுத்துதல்கள் தவணை மூலம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேலதிகமாக செலுத்தப்பட்ட சம்பளத்தை அறவிடல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மோட்டார் வாகனங்களை பதிவுசெய்யும் திணைக்களம் மற்றும் மாகாண போக்குவரத்து திணைக்களத்தின் தரவு முறைமைகளில் இருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் ஆயுர்வேத திணைக்களத்துக்குரிய 01 வாகனம் தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் அந்த வாகளம் மத்தியமகாண சபையின் நிறுவனத்தினால் பயன்படுத்தப்படுகின்றமைகரும் எந்தவொரு சான்றும் சமர்ப்பிக்கப்படவில்லை. | தகவல்கள் கண்டறிந்து அறிக்கையிடப்படும். | வாகனங்களின் தகவல்களை உரிய பிரகாரம் பேணிச் செலவதற்கும் உரிய தகவல்களை சேகரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.5.19 மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மாகாண நிதி வதி 54.5. மற்றும் 54.6 இன் பிரகாரம் மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சுக்குரிய வாகனமொன்றுக்கு விபத்தினால் ஏற்பட்டிருந்த நட் இழப்பு தொடர்பாக 2023 யூன் 30 ஆம் திகதி வரையிலும் எந்தவொரு ஆரம்ப பரிசோதனையும் அல்லது இறுதி பரிசோதனையோ நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 104(4) இன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அறிக்கை விரைவாக வழங்கப்படும். | நிதி விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2002 பெப்ரவரி 25 ஆம் திகதி இலக்கம் 01/2002 என்ற அரச நிருவாக சுற்றறிக்கையன் பிரகாரம் வீதி அபிவிருத்தி அமைச்சுக்குரிய 05 வாகனங்கள் அரச இலட்சினையிடல் மற்றும் வாகனங்களின் கதவில் சிறுவனங்களின் பெயரக் குறிப்பீடவதற்கு வாகன | சுற்றறிக்கை ஆலோசனைப் படி அரசாங்க இலட்சினை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் கணக்கீடும் செய்வதற்கும் தேவையான மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சுற்றறிக்கைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்து பதிவேடுகளை நாளதுவரையாக்கி வாகனங்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பதிவேடுகளை நாளதுவரையாகப் பேணிச் செலவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் ஒரு வாகனத்தின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | வீதி அபிவிருத்தி அமைச்சுக்கு 02 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலம் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட 03 விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒரு வாகனத்தை விற்றுத் தீர்ப்பதற்கும் மேலும் ஒரு வாகனத்தை பழுதுபார்ப்பதற்கும் அகற்றல் குழுவினால் பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பழுதுபார்த்து பயன்பாட்டுக்கு எடுக்கக் கூடிய வாகனங்களை பழுதுபார்ப்பதற்கும் அவ்வாறில்லையாயின் வாகனங்களளை விற்றுத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | நட்ட இழப்பு 762,881 ஆன 04 வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதி விதி 54 இன் பிரகாரம் ஆரம்ப மற்றும் இறுதி பரிசோதனைகள் மேற்கொண்டு பொறுப்புவாய்ந்த தரப்பினர் இனங்காணப்பட்டிருக்க வில்லை. மேலும் 02 வாகனங்கள் வாகன விபத்துக்களில் ரூபா 51,205 நட்ட இழப்பு மாகாண சபையின் நிதியத்திலிருந்து பதிவழிக்கப்பட்டு மேலும் 02 வாகன விபத்துக்களில் ரூபா 400,072 ஆன இழப்பு நட்டம் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | நிதி விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.19.1 மத்திய மாகாண பிரயாணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ராகல பேரூந்து நிலைய தரிப்பிடம் அமைந்துள்ள காணி தொடர்பாக 2001 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட நில அளவையாளர் நில அளவைப் படத்தின் பிரகாரம் 02 ஏக்கர் 24 பேர்ச் காணப்படுவதாக காண்பிக்கப்பட்ட போதிலும் அதற்குரிய 2017 யூலை 09 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட திட்டம் மற்றும் 2022 செப்டெம்பர் 15 ஆம் திகதிய உரித்துறுதியின் பிரகாரம் காணி 01 ஏக்கர் 01 றூட் மற்றும் 35 பேர்ச் ஆகக் காண்பித்து 02 றூட் 29 பேர்ச் அனுமதியற்ற குடியிருப்புக்காக இடமளித்து உரித்து முறையற்ற வகையில் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. | நீதிமன்றத்தில் வழக்கொன்று காணப்படுகின்றமையால் மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் தாமதமடைந்துள்ளது. | அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றி காணி உரித்தை முறையாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) பிரயாணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபையில் ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் I தரத்தில் பதவி உயர்த்துவதற்கு நிலையப்பொறுப்பு உத்தியோகத்தர் II தரத்தில் ஆகக் கூடிய சம்பளப் படிநிலையில் அடைந்ததன் பின்னர் அதாவது ஆட்சேர்த்து 18 வருடங்களுக்குப் பின்னர் உரித்தாக இருக்கின்றமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2002 செப்டெம்பர் 26 ஆம் திகதிய பணிப்பாளர் சபை கூட்ட அறிக்கையின் பிரகாரம் உத்தியோகத்தரின் | பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் I தரத்தின் சம்பளப் படிநிலை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆட்சேர்த்தல் நடைமுறைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நியமனத்திலிருந்து 01 வருடம் 06 மாதங்களின் பின்னர் அதாவது 2002 செப்டெம்பர் 06 ஆம் திகதி உத்தியோகத்தரின் கோரிக்கையினை கவனத்திற்கொண்டு அந்த உத்தியோகத்தர் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர முதலாவது தரத்தில் அமர்த்துவதற்கு அதிகார சபை நடவடிக்கை எடுத்திருந்தது. | | |
| (இ) | தாபன விதிக்கோவையின் II அத்தியாயம் 13.1(ஆ) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய அதிகார தரப்பினரின் அங்கீகாரம் இன்றி மற்றும் ஆட்சேர்த்தல் மற்றும் பதவியுயர்வு பணி நடைமுறை கோவையின் (2015) H.M.1.3 4.1.1 மற்றும் 4.1.2 இல் குறிப்பிடப்பட்ட H.M.1.1 சேவை தொகுதியில் உள்ளக விண்ணப்பதாரர் பூர்த்திசெய்ய வேண்டிய தகைமைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்த பிரயாணிகள் போக்குவரத்து அதிகார சபையின் சிரேஷ்ட முகாமையாளர் (ஓட்ட) பதவியின் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் 2021 ஆகஸ்ட் 05 ஆம் திகதி முதல் பிரதிப் பொது முகாமையாளர் (அபிவிருத்தி) பதவியின் கடமைகளை மேவுகை செய்வதற்காகவும் மற்றும் 2023 பெப்ரவரி 02 ஆந் திகதிய கடிதத்தின் பொது முகாமையாளர் (பதிற்கடமை) பதவியில் அதிகார சபையின் தலைவரால் நியமிக்கப்பட்டிருந்தார். | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின்படி சில வெற்றிடங்கள் தொடர்பாக வேலை மேவுகையின் அடிப்படையில் கடமை நிறைவேற்றப்படுகின்றது. | வெற்றிடங்களுக்காக தகைமைபெற்ற உத்தியோகத்தர்களைச் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) மாகாண நிதிவிதி 54.5 மற்றும் 54.6 இற்கு முரணாக பிரயாணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபைக்குரிய 03 வாகனங்களுக்கு உரியதாக ஏற்பட்ட ரூபா 2,297,968 ஆன இழப்பு நட்டம் தொடர்பாக நிதி விதி 54 இன் பிரகாரம் 2023 யூன் 30 ஆந் திகதி வரையிலும் எந்தவொரு ஆரம்ப பரிசோதனை அல்லது இறுதிப் பரிசோதனை ஒன்றேனும் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 104(4) இன் பரிசோதனைகள் நடாத்தி நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) 2002 பெப்ரவரி 25 ஆம் திகதிய இலக்கம் 01/2002 என்ற அரச நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் பிரயாணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபைக்குரிய 27 வாகனங்களில் அரசாங்க இலட்சினை இடுதல் மற்றும் வாகனக் கதவில் நிறுவனத்தின் பெயரைக் குறிப்பிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் ஆலோசனையின் படி அரசாங்க இலட்சினை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிகைகை ஆலோசனை களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.19.2 மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் ரூபா 1,714,250 தொகை செலவில் கம்பளை பல்நோக்குக் கட்டிடம் குத்தகைக்கு வழங்குவதற்காக இரண்டு சந்தர்ப்பங்களின் போது பத்திரிகை அறிவித்தல் பிரசுரிகப்பட்ட போதிலும் கட்டடங்களை வியாபார தேவைகள் பூர்த்தி செய்யும் வகையில் நிர்மாணிக்காமையின் | பயனற்ற செலவினமாக அல்லாமல் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | செலவினங்கள் பனற்ற வகையில் இல்லாதிருப்பதற்கு கணக்காணித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக கட்டிடத்தை வாடகைக்கு எடுப்பதற்கு விண்ணப்பதாரர்கள் முன்வராமையினால் அதற்காக செலவிடப்பட்ட தொகை பயனற்றதாக இருந்தது. | | |
| (ஆ) | அம்பதென்ன இயந்திரப் பொறியியலாளர் பிரிவினால் 2010 ஆகஸ்ட் 17 ஆம் திகதி முதல் 2023 சனவரி 05 ஆம் திகதி வரையான காலத்தில் 34 நிறுவனங்களில் 86 சந்தர்ப்பங்களின் போது இயந்திரங்கள் பழுதுபார்க்கப்பட்டமைக்காக அறவிடவேண்டிய சேவைக்கட்டணம் கூட்டுமொத்தமாக ரூபா 5,605,441 அறவிடப்பட்டிருக்கவில்லை. அதில் ரூபா 4,141,876 தொகை 05 வருடங்களுக்கு உட்பட்ட காலத்திலிலருந்து அறவிடவேண்டியதாக காணப்பட்டது. | 2016 ஆம் ஆண்டில் அந்த ஆண்டிற்கு முன்னைய ஆண்டிலிருந்தும் அறவிடல் முறைமையின் வலுக்கள் மற்றும் பிரச்சினைகள் காணப்பட்டது. தற்போது நிலுவைத் தொகையில் ரூபா 4,034,941 கிடைக்கப் பற்றுள்ளது. | நிலுவைக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சேவை நிலையங்களில் இயந்திரங்களை செயல்படுத்துவதற்கு தேவையான தொழிற்நுட்ப பயிற்சி பெற்ற பதிவியணியினர் ஆமட்சேர்த்தல் தாமதமடைந்ததன் அடிப்படையில் 2015 ஆம் ஆண்டின் போது அம்பெத்தென்ன சேவை நிலையத்திற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 4,040,000 பெறுமதியுடைய 03 இயந்திரங்கள் 08 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக சேவை நிலையத்தில் பயனற்று காணப்பட்டது. | 02 இயந்திரங்களை தொடர்ச்சியான வருமானம் உழைக்கப் படுகின்றது ஏனைய இயந்திரங்களுக்காக பயிற்சி ஊழியரை சேர்த்துக் கொள்வதற்கு முடியதுள்ளது. | தொழில்நுட்ப பயிற்சி பெற்ற பதவியணியினரை சேர்த்துக் கொள்வதற்கு சேவை நிலையங்களை யெற்பாடுள்ளதாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | அம்பதென்ன இயந்திர பொறியியலாளர் பிரிவில் கூட்டுமொத்தமாக ரூபா 2,800,000 மண் செப்பனிடும் 08 இயந்திரங்கள் (Plate Compactor) 2007 ஆம் ஆண்டிலிருந்து விளைவற்று அழிவடைவடைந்து செல்வதற்கு இடமளிக்கப்பட்டிந்தது. இயந்திரங்களை விற்றுத் தீர்ப்பதற்கோ அல்லது ஏனைய பொருத்தமான நடவடிக்கைகளோ எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த இயந்திர வேலைத் தளங்களில் ஈடுபடுத்தும் போது வாகனங்களுக்கு ஏற்றும் வேலை தரைக்கு விடுவிப்பதற்காக கனிசமான அளவில் மனித ஊழியம் பயன்படுத்த வேண்டி ஏற்பட்மையினால் பயன்படுத்துதல் வசதியீனமாக இருந்தது. இதில் 07 இயந்திரங்களை அகற்றுவதற்காக முன்மொழிவு செய்யப்பட்டுள்ளது. | சொத்துக்களை செயற்பாடுள்ளதாக பயன்படுத்துவதற்கொ அல்லது முறையான பிரகாரம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுபப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 04 வானங்கள் உடைந்ததன் காரணமாகஇரண் வருடங்கள் முதல் 12 வருடங்கள் வரையிலான காலத்தில் இருந்து பயன்படுத்த முடியாதமைக்காக ஓட்டத்திருந்து அகற்றப்படுவதுடன் அந்த வாகனங்களை பழுதுபார்க்காமல் அதிகா சபையின் வாடகை அடிப்படையில் 06 வாகனங்களைப் பெற்று அதறடகாக மாதாந்தம் ரூபா 1,212,824 வீதம் செலவிடப்பட்டிருந்தது. | வாகங்களை பழுதுபார்த்து ஓட்ட நிலைமைக்கு உட்படுத்துவதற்கு பொருத்தமான நிலையில் காணப்படவில்ல. (உறுதிப்படுத்தப்படவில்லை) விற்று தீர்ப்பதற்காக பிரதம செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | வாகனங்கள் தொடர்பாக மோட்டார் இயந்திரப் பொறியியலாளரின் பரிந்துரை அடிப்படையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | உரிய பிரகாரம் சாத்தியவள ஆய்வு செய்த பின்னர் திட்டமிட்டு மொத்தக் கிரயம் மதிப்பீடு சரியாக தயாரிக்காமல் 2018 ஆம் ஆண்டில் ரூபா 146,971,232 ற்கு கம்பளை பல நோக்குக்கட்டடம் நிர்மானிக்கும் மதிப்பீடு தயாரித்து 2023 செப்டம்பர் 10 ஆம் திகதி உள்ளவாறு கூட்டுமொத்தமாக ரூபா 305,607,447 | மொத்த மதிப்பீடு ரூபா 189,793.007.13 மதிப்பீடு 2018 இல் ஆக இருந்த போதிலும் நிர்மாணம் ஆரம்பித்தல் 2020 இல் ஆகும். காணப்பட்ட கொரோனா நிலைமை மற்றும் பொருள் விலைகள் உயர்வடைந்து சென்றமையால் அத்தியவசிய வேலைப்பகுதிகளை நிறைவேற்ற வேண்டி | மதிப்பீட்டைத் திருத்தி அங்கீகரித்துக் கொள்ளல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவிடப்பட்டிருந்ததுஇ அதன் பிரகாரம் மதிப்பீட்டுக் கிரயத்தை விஞ்சி ரூபா 158,636,215 தொகை நிர்மாணத்திற்காக செலவிடப்பட்டிருந்தது. | ஏற்பட்டமையினால் மதிப்பீட்டை விஞ்சி செலவினங்கள் மேற்கொளள்ளப்பட்டுள்ளது. | |
| (எ) | 2018 ஒக்டோபர் 18 ஆம் திகதிய மத்திய மாகாண சபை கலைக்கப்பட்டதன் பின்னர் 05 அமைச்சுக்களின் அமைச்சர்கள் மற்றும் பிரத்தியோக பதவியணியினர் பயன்படுத்திய 61 வாகனங்கள் பிரதம செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு கையளிக்கும் போது இந்த வாகனங்கள் தேவைகளின் பிரகாரம் வீதி அதிகார சபைக்கு பெற்றுக் கொள்ளும் இயலுமை அதாடர்பாக கவனத்தில் கொள்ளாமல் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அதன் பிரதான/ நிறைவேற்று பொறியியலாளருக்காக பிரிவின் வீதி பரிசோதனை நடவடிகட்கைகள் மற்றும் பல்வேறு கூட்டங்களுக்கு பங்குபெற்றுவதற்கு இரட்டை பணிகளுக்கு 12 வாகனங்கள் 2018 முதல் 2023 ஆகஸ்ட் வரையான காலத்தில் வாடகை அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்த வாடகையாகவும் கூட்டுமொத்தமாகவும் ரூபா 75,092,077 சைனா தரப்பினருக்கு செலுத்தப்பட்டிந்தது. | ஏனைய நிறுவனங்கக்கு நியமிக்கப்பட்ட குழாம் வாகனங்களாக பயன்படுத்தப்படுகிறது. | செலவினங்களைச் செய்கின்ற போது அதற்காக அங்கீகரிக்கக் கூடிய மாற்று வழி முறைகளை மதிப்பீட்டுக்கு உட்படுத்தி மிகம் ஆக்கபூர்வமான சிறந்த மாற்று வழிகளை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரிய வாகனம் 03 மோட்டார் சைக்கிள் தொடர்பாக ஆவணங்கள் தொடர்பாக நாளதுவரையாக பேணிச் செல்லப்படாதிருந்ததுடன் அந்த வாகனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீ செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பயன்படுத்தப்படுகின்ற இந்த வாகனங்கள் தொடர்பாக எழுத்து மூலம் அறிவிக்கப்படாமையினால் அப் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய முடியவில்லை. | வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |

## 1.5.20 தலைப்பு 571 – மத்திய மாகாண வீடமைப்புத் திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீடமைப்புத் திணைக்கள்தின் ‘‘சகன் பியச’’ வீடமைப்பு கடன் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 53 கடனாளிகளுக்கு 2014 ஆம் ஆண்டிலிருந்த மீளய்வாண்டின் இறுதி வரை வழங்கப்பட்ட கடன் தொகையில் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 1,504,991 நிலுவைக் கடன் அறவிடப்பட்டிருக்க வில்லை. | 2023.12.31 இல் கொடுப்பனவுகளை புறக்கனித்துள்ள கடன் நளனாளிகள் தொடர்பாக தகவல்களை வழங்குமாறு வங்கியலிருந்து கோரப்பட்டுள்ளது. | நிலுவைக் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1994 ஆம் ஆண்டிலிருந்து 2001 வரையான காலப்பகுதியில் வீடமைபபுத் திணைக்களத்தன் வீடமைப்பு கடன் நலளாளிகள் 880 பேர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 5,682,579 கடன் பணத்தை அறவிடுவதற்கு சட்ரீதியான நடவடிக்கைகளோ எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் செயலாளரால் நடாத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 104(4) பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் இறுதிக் கடன் மீதியை புத்தககங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வீடமைப்புக் கடனை அறவிடுவதற்கு நடநவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.21 தலைப்பு 582 – மத்திய மாகாண கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் வணிக மேம்படுத்தல் திணைக்களம்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் வியாபார மேம்படுத்தல் திணைக்களத்தின் தொழம்புகொல்ல மர வேலை தொழிநுட்ப பயிற்சி நிலையத்தின் பயிற்சி விரிவுரை மண்டபம் 2016 ஆம் ஆண்டில் ரூபா 2,384,612 தொகை செலவில் புதுப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அத்திகதியிலிருந் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமல் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே அதன் மாணவர் விடுதிகள் மற்றும் சமையலறையும் பயன்படுத்தப்படாமல் பயனற்றதாகக் காணப்படுவதுடன் வட்டப்புலுவ மரம் வேலை தொழில்நுட்ப பயிற்சி நிலையத்தின் மாநாட்டு மண்டபமும் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | விரிவுரை மண்டபத்தை முறையான கட்டண முறைமையின் கீழ் வெளி நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாநாட்டு மண்டபம் திணைக்களத்தின் மூலம் அமுல்படுத்துகின்ற பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துகின்றமையினால் குறைவாகப் பயன்படுத்தப்படவில்லை. | சொத்துக்களை செயற்றிறனாகப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**1.5.22 தலைப்பு 583 – மத்திய மாகான விளைட்டுத்துறை திணைக்களம்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மத்திய மாகான விளையாட்டுததுறை நிறுவனத்திற்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் மூலம் 2021 ஆம் ஆண்டில் பா 2,000,000 தொகை மத்திய மாகாணத்திற்கு வழங்கப்பட்ட போதிலும் நோக்கமிடப்பட்ட பணிகளுக்கு நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமல் மெத்தத் தாகையும் செலவிட்டு மத்திய மாகாண விளையாட்டுத் திணைக்களத்திற்கு பல்நோக்கு | 2021 ஆம் ஆண்டில பல்நேக்கு விளையாட்டு நிலையத்திற்காக ஒதுக்கப்பட்ட 03 மில்லியன் நிதியேற்பாட்டிற்காக கொள்வனவு செய்யப்பட்ட போது நிறைவேற்றுவதற்கு அந்த ஆண்டில் நிதி கிடைக்காமையினால் அந்தப் பணம் மட:ப்படுத்தப்பட்டுள்ளது. | நிதியேற்பாடு குறித்துரைத்த ஏற்பாடுகளுக்கு நிறைவேற்றுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விளையாட்டு நிலையத்திற்காக உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. | | |
| (ஆ) | மத்திய மாகாண விளையாட்டு கட்டிடத் தொகுதிக்குரிய நடைமுறைக் கணக்கில் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் ரூபா 2,117,465 மீதியொன்ற காணப்பட்ட போதும் அந்த பணம் அங்கீகரிக்கப்பட்ட பணிகளுக்கு ஈடுபடுத்துவதற்கோ அல்லது ஆக்கபூர்வமான துறைகளில் முதலீடு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்காமல் பயனற்று காணப்பட்டது. | ரூபா 50 இலட்சம் தொகை முதலீடு செய்து நிலையான வைப்பொன்றில் இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துதல் வேண்டும். |
| (இ) | 2002 பெப்ரவரி 25 ஆம் திகதிய இலக்கம் 01/2002 என்ற அரச நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் விளையாட்டுத்துறை திணைக்களத்திற்குரிய வாகனத்தின் அரசாங்க இலட்சினை இடுதல் மற்றும் வாகன கதவுகளில் நிறுவனத்தின் பெயர் குறிப்பிடுவதற்கும் மற்றும் பதிவேடுகளை நாளதுவரையாக பேணிச்செல்லப்படாதிருந்ததுடன் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் அரசாங்க இலட்சினை இடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சுற்றறிக்கைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல். ஆவணங்களை நாளதுவரையாக்குதல் மற்றும் வாகனங்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.23 தலைப்பு 590 – விவசாய அமைச்சு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ---------------------------------------------- | ------------------------------ | ------------------------------ |
| (அ) | மாகாண விவசாய அமைச்சின் மீளாய்வாண்டின் மாகாண குறித்துரைத்த அபிவிருத்தி மானியம் மற்றும் பிரமாண அடிப்படையிலான மானியத்தின் கிழ் ரூபா | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பௌதீக செயல் முன்னேற்றம் 0 சதவீதம் முதல் 25 சதவீதத்திற்கு இடையிலான ஆகக் | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிடப்பட்ட பிரகாரம் அமுல்படுத்துவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | 66,550,000 நிதி ஏற்பாட்டின் மூலம் 35 நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்த ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டத்தினதும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பௌதீக செயல் முன்னேற்றம் 0 - 25 சதவீதத்திற்கு இடையிலான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | குறைந்த வீச்சு மட்டத்தில் காணப்பட்டது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2002 பெப்ரவரி 25 ஆம் திகதிய இலக்கம் 01/2002 என்ற அரச நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் விவசாய அமைச்சிற்குரிய 40 வாகனங்களின் அரசாங்க இலட்சினை இடுதல் மற்றும் வாகன கதவுகளில் நிறுவனத்தின் பெயரைக் குறிப்பிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் அரசாங்க இலட்சினை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மோட்டார் வாகனங்களை பதிவு செய்யும் திணைக்களம் மற்றும் மாகாண போக்குவரத்து திணைக்களத்தின் தரவு முறையிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் விவசாய அமைச்சிற்குரி வாகனங்கள் தொடர்பான தகவல்கள் மேவுகை செய்யப்படாதிருந்ததுடன் அந்த வாகனங்கள் மாகாண சபையின் நிறுவனத்தினால் பயன்படுத்தப்படுகின்றமை எந்தவொரு சான்றும் சமர்ப்பிக்கப்படவில்லை. | தகவல்களைக் கண்டறிந்து அறிக்கையிடப்படும். | வாகனங்களின் தகவல்களை சரியான பிரகாரம் பேணிச் செல்வதற்கும் உரிய தகவல்களை சேகரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.24 தலைப்பு 591 - மத்திய மாகாண விவசாயத் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2021 ஆம் ஆண்டின் போது மாகாண குறித்துரைத்த அபிவிருத்தி மானியத்தின் கீழ் முல்ஹால் கெலே விவசாய ஆலோசனை உத்தியோகபூர்வ விடுதி, வளப்பனை உதவி விவசாயப் பணிப்பாளர் அலுவலகமாக நவீனமயப்படுத்துவதற்காக 2021 ஒக்டோபர் 04 ஆம் திகதி ரூபா 10,229,108 தொகையில் உடன்படிக்கை செய்து நிர்மாணம் கையளிக்கப்பட்டிருந்தது. எனினும் 2022 திசெம்பர் 15 ஆம் திகதி வரையும் வேலை இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் நிறைவேற்றப்பட்ட வேலைகளுக்காக ரூபா 4,094,544 செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் அந்த நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக அதற்காக செலவிடப்பட்ட பணம் பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | மாகாண குறித்துரைத்த அபிவிருத்தி மானியத்தின் கீழ் திட்டமிடப்படுகின்ற செயற் திட்டங்களை ஆக்கபூர்வமாக அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் விவசாய புத்தாக்க செயற்திட்டத்தின் கீழ் பாதுகாப்பு கூடமொன்றை நிர்மாணித்த பின்னர் நீர் வழங்கல் தொகுதி வழங்க வேண்டியிருந்த போதிலும் அந்த கொட்டகை நிர்மாணங்கள் கையளிக்கப்படாதிருக்கும் போது மாகாண விவசாயத் திணைக்களத்தால் கடந்த ஆண்டில் தொழில் | நுண்நீர் வழங்கல் தொகுதிகள் வழங்கி 2024 ஆகஸ்ட் மாதம் வரை நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்படும். | மூலதன மானியத்திற்குரிய செயற்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளுக்கு ஆக்கபூர்வமாக செயற்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முயற்சியாளர்கள் விவசாய ஏற்றுமதி கிராம நிகழ்ச்சித்திட்டம் II கட்டத்தின் கீழ் றம்புக்பிட்டிய விவசாய ஆலோசனைப் பிரிவில் 25 நலனாளிகளுக்கு ரூபா 2,876,088 நுண்நீர் வழங்கல் தொகுதிகள் 25 வழங்கியதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் அந்த நீர் வழங்கல் தொகுதிகள் பயனற்றுக் காணப்பட்டது. | | |
| (இ) | 2021 ஆம் ஆண்டில் சேதனப் பசளை உற்பத்தி செயற்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் கீழ் விவசாயத் திணைக்களத்திற்குரிய நவயால தென்ன மாவட்ட விவசாய ஆராய்ச்சி பயிற்சி நிலையத்தில் மண் ஆய்வுகூடத்தை நவீனமயப்படுத்துதல் மற்றும் மண் பரிசோதனை உபகரணங்களுக்காக முறையே ரூபா 3,000,000 மற்றும் ரூபா 14,518,059 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 17,518,059 செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் மண் பரிசோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமல் அதற்காக வழங்கப்பட்ட உபகரணங்கள் உறைகளில் வைத்து பயனற்றுக் காணப்பட்டது. | 2024 ஆகஸ்ட் வரையிலும் சரியான பிரகாரம் மண் பரிசோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும். | மூலதன மானியங்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | விவசாய அமைச்சு (மத்திய அரசு) 2022/2023 ஆம் ஆண்டுகளில் அமுல்படுத்திய வயல் காணிகளில் மண் பரிசோதனை செய்து மண் சுகாதார அறிக்கை வழங்கும் செயற்திட்டத்தின் பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக | நுவரெலியாவில் 1124 மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டு உரிய அறிக்கை விவசாயிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மாத்தளையில் இந்த தொகுதிகளை பயன்படுத்துதல் நிலக்கீழ் | மூலதன மானியங்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுமொத்தமாக ரூபா 10,349,100 மண் பரிசோதனை தொகுதிகள் (Soil Test Kit) 90 மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள சகல விவசாய ஆலோசனை அலுவலகங்களுக்காகவும் ஒரு தொகுதி வீதம் வழங்கப்பட்டிருந்த போதிலும் தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் நுவரேலியா மற்றும் மாத்தளையில் அமைந்துள்ள 34 விவசாய ஆலோசனைப் பிரிவுகளில் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் மண் தெரிவுப் பரிசோதனையின் செயல் முன்னேற்ற பரிசோதனை 1 முதல் 34 வரை ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் 11 விவசாய ஆலோசனைப் பிரிவுகளில் அக்காலத்தில் எந்தவொரு மண் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | நீரைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தலும் தற்போது இது வரை மேற்கொள்ளப்படவில்லை. | |
| (உ) | விவசாயத் திணைக்களத்திற்கு சொந்தமான கூட்டுமொத்தமான ரூபா 5,500,000 ஆன 02 வாகனங்கள் 02 வருடங்கள் முதல் 03 வருடங்களுக்கு மேற்பட்ட கால வீச்சில் பழுதுபார்க்கப் படாமல் குண்டசாலை மற்றும் நுவரேலியா விவசாய பணிப்பாளர் அலுவலக வளவில் தரித்து வைக்கப்பட்டிருந்தது. | ஏனைய நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை செயற்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஊ) | 2002 பெப்ரவரி 25 ஆம் திகதிய இலக்கம் 01/2002 என்ற அரச நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் விவவசாய திணைக்களத்திற்குரிய 28 வாகனங்களின் அரசாங்க இலட்சினை இடுதல் மற்றும் | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் அரசாங்க இலட்சினை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாகன கதவுகளில் நிறுவனத்தின் பெயர் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (எ) | விவசாயத் திணைக்களத்திற்குரிய வாகனம் மற்றும் 03 மோட்டார் சைக்கிள்கள் தொடர்பாக ஆவணங்கள் நாளதுவரையாக பேணிச்செல்லப்படாதிருந்ததுடன் அந்த வாகனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விவசாயப் பணிப்பாளர் பெயரில் பதிவு செய்த பின்னர் கணக்கீடு செய்யப்படும். | பதிவேடுகளை நாளதுவரையாக்கி வாகனங்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்யும் திணைக்களம் மற்றும் மாகாண போக்குவரத்து திணைக்களத்தின் தரவு முறைமையில் இருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் விவசாயத் திணைக்களத்திற்குரிய 06 வாகனங்கள் தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்படாதிருந்த துடன் அந்த வாகனங்கள் மத்திய மாகாண சபையின் நிறுவனத்தினால் பயன்படுத்தப்படுகின் றமைக்கும் எந்தவொரு சான்றும் சமர்ப்பிக்கப்படவில்லை. | தகவல்களைக் கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிக்கப்படும். | வாகனங்கள் தொடர்பான தகவல்கள் சரியான பிரகாரம் பேணிச் செல்வதற்கும் உரிய தகவல்களை சேகரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.25 தலைப்பு 592 - மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | --------------------------------------------- | ------------------------------ | ------------------------------ |
| (அ) | தேவைகளை சரியான பிரகாரம் இனங்காணாமல் கால்நடை வைத்தியசாலை மற்றும் மிருக வைத்திய அலுவலகங்களின் சிகிக்சைக்காக கடந்த ஆண்டின் போது | 2022 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட தேவை 2027 இற்கு ஆகும். இந்த மருந்தில் காலாவதியாகும் திகதி 2027 ஆனமையால் | இருப்பு தேவைகளுக்கு இணங்க உச்ச இருப்பு முகாமைத்துவம் நிறுவனத்தில் |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுமொத்தமாக ரூபா 2,383,500 செலவில் கொள்வனவு செய்யப்பட் Scalp Vein Set (Butterfly needles 100N) என்ற 22,700 இனால் கூட்டுமொத்தமாக ரூபா 1,810,200 தொகுதிகள் 17,240 மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் மாகாணப் பணிப்பாளர் அலுவலக களஞ்சியத்தில் மிகையாக காணப்பட்டது. | களஞ்சியத்தில் காணப்படுகின்ற இருப்பு தேவையின் பிரகாரம் விநிகோகிக்கப்படுகின்றது. | ஸ்தாபிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகதாரத் திணைக்களத்தின் புள்ளிவிபரங்களின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டு முதல் 2023 பெப்ரவரி மாதம் வரையான கால வீச்சில் மத்திய மாகாணத்தில் 44 கால்நடை மருத்துவ பிரிவில் கால்நடை அபிவிருத்தி ஆலோசனையாளர்கள் மற்றும் தனியார் கருக்கட்டல் தொழில்நுட்பவியலாளர்களினால் 156,128 கருக்கட்டல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதில் பிறந்த 46,208 எண்ணிக்கையிலான கன்றுகளில் மொத்த கருக்கட்டல் மேற்கொள்ளப்பட்ட அளவில் 30 சதவீதம் ஆன குறைந்த சதவீதம் ஆகும் அதன் பிரகாரம் 109,920 கருக்கட்டல் வெற்றி யளிக்காதிருந்ததுடன் அது 70 சதவீதமாக இருந்தது. | வெப்பநிலை நோய் நிலைமை, கருத்தரித்த கால்நடைகளை விற்பனை செய்தல், அரை நுண் மற்றும் தளர்வான முறைமையின் கீழ் கால்நடைகளை அங்குமிங்கும் அலைந்து திரிதல், ஆண் கன்றுகளின் பிறப்பு அறிக்கையிடப்படாமை, கருக்கட்டல் காலத்தில் கால்நடைகள் சரியாக கண்காணிக்கப்படாமை போன்றவற்றின் காரணமாக இலங்கையில் செயற்கை சினைப்படுத்தலின் அடைவு 50 சதவீதம் ஆகும். சினைப்படுத்தல் தொழில்நுட்ப வியலாளர்களின் கவனத்திற்காக முறையான வேலைத் திட்டமொன்றில் பின்தொடர் நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தி எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | சினைப்படுத்தலை வெற்றிகரமாக மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்காக முறையான தகவல் முறைமையொன்று பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இன விருத்தி நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் விவசாய ரீதியில் கால்நடைகளின் உற்பத்தி பங்களிப்பை கட்டியெழுப்புதல் மாகாண கால்நடை உற்பத்தி | பொருளாதார நெருக்கடி நிலைமைகளை அகற்றுவதுடன் இந்த நிலைமைகளை சிறந்த நிலைமைக்கு மீண்டும் கொண்டுவரும் இயலுமை | அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக கிடைத்த மூலதன நிதி ஏற்பாட்டை ஆக்கபூர்வமாக பயன்படுத்த |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பிரதான பணியாக இருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டில் மத்திய மாகாணத்தில் பதிவுசெய்திருந்த ஒட்டுமொத்த பண்ணைகளின் எண்ணிக்கை 38,081 காணப்பட்ட போதிலும் 2022 ஆம் ஆண்டு வரையில் 31,344 பண்ணைகள் 6,734 இனால் குறைவடைந்திருந்ததுடன் அந்த காலத்திற்குரியதாக அதில் உள்நாட்டு பால் உற்பத்தி பிரதான பங்களிக்கின்ற பசுமாடுகள் மற்றும் எருமை மாடுகளின் பண்ணைகளின் எண்ணிக்கை 6,441 இனால் அதாவது 17 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.<br>அவ்வாறே 2020 ஆம் ஆண்டில் 100,423 ஆன கால்நடைகளின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டின் போது 82,228 வரை 18,195 இனால் வீழ்ச்சியடைந்திருந்தமை பால் உற்பத்தி குறைவடைவதற்கு தாக்கமளித்திருந்தது. 2020 முதல் 2022 வரை கால்நடை வளத்துறையில் பல்வேறு அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக ரூபா 123,163,160 செலவிடப்பட்டிருந்த போதிலும் விவசாயிகள் கணிசமான எண்ணிக்கையில் கால்நடை வளர்ப்பிலிருந்து விலகியிருந்தனர். | உள்ளது.<br>திணைக்களத்தால் விஷேட நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. | வேண்டியிருந்ததுடன் பின்தொடர் நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப் படல் வேண்டும். |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் 30/2016 என்ற அரச நிருவாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திற்குரிய 03 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவு பரிசோதனை குறித்துரைத்த காலத்தில் மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணக்களத்திற்குரிய வாகனங்கள் மற்றும் 03 மோட்டார் சைக்கிள்கள் தொடர்பான பதிவேடுகள் நாளதுவரையாக பேணிச் செல்லப்படாதிருந்ததுடன் அந்த வாகனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விவசாயத் திணைக்களத்தின் பொறியியலாளர் பிரிவின் மூலம் பெறப்பட்ட தகவல் மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பதிவேடுகளை நாளதுவரையாக்கி வாகனங்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 07 கால்நடை மருத்துவ அலுவலகங்களுக்குரி 07 வாகனங்கள் விபத்திற்கு உற்பட்டு பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்படாமல் உரிய கால்நடை மருத்துவ அலுவலகங்களில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. | 01 வாகனம் பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கோ அல்லது ஏனைய நிறுவனத்திற்கு வழங்குவதற்கோ மற்றும் 01 வாகனம் பயன்பாட்டிலிருந்து அகற்றி விற்றுத்தீர்ப்பதற்கும் குழு பரிந்துரை செய்திருந்தது. வாகனம் ஒன்றை பழுதுபார்ப்பதற்காக அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் 01 வாகனத்தையும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. 03 வாகனங்கள் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. | பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய வாகனங்களை பழுதுபார்ப்பதற்கும் ஏனைய வாகனங்கள் தொடர்பாக விற்றுத் தீர்க்கும் குழுவின் பரிந்துரை அமுல்படுத்தப்படல் வேண்டும். |
| (எ) | மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்யும் திணைக்களம் மற்றும் மாகாண போக்குவரத்து திணைக்களத்தின் தரவு முறைகளில் இருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்குரிய 09 | தகவல்களைக் கண்டறிந்து அறிக்கையிடப்படும். | வாகனங்கள் தொடர்பான தகவல்கள் உரிய பிரகாரம் பேணிச்செல்வதற்கும் உரிய தகவல்களைச் சேரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

வாகனங்கள் தொடர்பான தகவல்களை மேவுகை செய்யப்படாதிருந்ததுடன் அந்த வாகனங்கள் மத்திய மாகாண சபையின் நிறுவனத்தினால் பயன்படுத்தப்படுகின்றமைக்கும் எந்தவொரு சான்றுகளும் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 1.5.26 தலைப்பு 593 - மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2017 இன் 05 ஆம் இலக்க மாகாண சபையின் நீர்ப்பாசன விஞ்ஞாபனத்தின் II பகுதியின் 7(5) ஆம் பிரிவு மற்றும் 7(7) ஆம் பந்தியின் பிரகாரம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் விடயப் பரப்பிற்கு உரித்தான சகல நீர்ப்பாசன முறைமைகளினதும் பட்டியல் தயாரித்து அரசாங்கத்தின் வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்டு நீர்ப்பாசன முகாமைத்துவ பிரதேச அதிகார சபைகளை ஸ்தாபித்தல், பதிவு செய்தல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள் மேற்கொள்ளாமையின் காரணமாக விஞ்ஞாபனத்தின் iii ஆம் பகுதியின் 12 ஆம் பந்தியின் பிரகாரம் நீர்ப்பாசன முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்திக் குழுக்களில் (அ-ஓ) வரை பணிப்பொறுப்புக்களை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | உடதென்ன குளத்தின் உரித்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மத்திய மாகாண நீர்ப்பாசன விஞ்ஞாபனத்தின் பிரகாரம் சிறிய நீர்ப்பாசனங்களை வர்த்தமானியின் மூலம் வெளியிடல் தேவையற்றதாகும். விஞ்ஞாபனத்தை அமுல்படுத்துவதற்கு பதவியணியினர் போதியளவில் காணப்படவில்லை. | விஞ்ஞாபனத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |